# புயல் கொடுமையைப் போக்க தி. மு. கழகத் திட்டம்


# திராவிடநாடு

மலர் 11 | 21—12 52 | இதழ் 25

விலை அணு இரண்டு


## ஆச்சாரியார் முன்வருவாரா?

## 'கூட்டு 'லெவி' விதிக்கலாம்'

## "குவிந்திருக்கும் பணத்தைத் திரட்டலாம்"

## அவசரச் சட்டம் பிறக்குமா?

### சி, என். ஏ. தரும் யோசனைகள்

"ஐந்து கோடிக்குமேல் தஞ்சை திருச்சி மாவட்டங்களில் சேதமென, சர்க்கார் கூறுகிறது. இந்த நஷ்டம் சாதாரணமானதல்ல. இதை ஈடு செய்து, கஷ்டப்படுவோருக்கு நிவாரணம் செய்யும் சுலபமான வழிகளைக் கூறுகிறேன். எதற்கெடுத்தாலும் அவசரச் சட்டங்களை அள்ளி வீசும் ஆச்சாரியார் சர்க்கார், இந்த நல்ல யோசனையை அமுலாக்கத் துணியுமா? அவசரச் சட்டம் பிறப்பிக்குமா?" என்று 14—12—52 அன்று மாலை தஞ்சையில் நடைபெற்ற மாபெரும் மக்கள் மன்றத்தில், தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை அறைகூவல் விடுத்தார். மேற்படி பொதுக்கூட்டத்தில் தனது யோசனைகளை விளக்கி, அவர் பேசியதாவது:

"இயற்கையின் கொடுமையால் தஞ்சையும் திருச்சியும் பாழ்பட்டதை எண்ணி பதறினேன். அழகுள்ள தஞ்சைத் தரணி! சாலையும், சோலையும் நிரம்பிய நன்செய் பூமி, புயலுக்கு இரையாகித் தவிக்கிறது. "கன்னித் தமிழ்ச் சோலையோரம் ..." என்று நண்பர் கே. ஆர். ராமசாமி பாடினார். அந்தப் பாடலை மெய்ப்பிக்கும் தமிழ்ச் சோலைகள் இன்றில்லை! சாய்ந்த மரங்கள் கிடக்கின்றன—அவைகளுக்கு அடியிலே பிணங்கள்—அலையால் சுருண்டு வீழ்ந்த குடும்பங்கள்—கடல் நீர் ஊருக்குள் புகுந்து, உரைக்கவும் அஞ்சுமளவுக்கு நாசம். வாழையில்லை! தென்னைகள் சாய்ந்தன! அழகு மிளிரும் தோட்டங்கள் நாசம்! இத்தகைய கோர விளைவுகளுக்கு ஆட்பட்ட தஞ்சைத் தரணியில் கொஞ்சம் நிலை வரவேண்டும், மீண்டும். புயலின் ஒருநாள் புன்னகை—சாலைகளிலே சாய்ந்தன மரங்கள்! 'பாலைவனம்' காட்சியளிக்கிறது, இங்கே! இயற்கையின் கொடுமையால் ஏற்பட்ட நஷ்டம், இவ்வளவு அவ்வளவென்று சொல்லிமுடியாது. இருப்பினும் சர்க்கார் மதிப்பிட்டுள்ளதாம், ஐந்து கோடி ரூபாய்க்கு சேதமிருககலாமென்று! சர்க்காரின் மதிப்பு இதுவென்றால், சாதாரணமாக ஏற்பட்ட நஷ்டங்களின் மொத்த மதிப்பு எவ்வளவோ? இவ்வளவு சீரழிவு, ஒருநாள் புயலால்! சிதைந்த பூமியைப் பார்க்கிறேன்—சிந்தை நோகிறேன். இயற்கையின் தொட்டில் போல விளங்கும், இத்தரணியிலே, மீண்டும் பழைய நிலை ஏற்படவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்—அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறேன். இதற்கான எல்லாவித ஒத்துழைப்பையும் சர்க்காருக்குத் தர தயாராயிருக்கிறேன்—தி.மு.க.வும் தயாராயிருக்கிறது. புயலின் கோரத்தாண்டவத்தால் ஏற்பட்ட நஷ்டம் சாதாரணமானதல்ல. அவ்வளவு பேருக்கும் சகாயம் செய்வதென்பதும் எளிதல்ல. இந்தப் பிரச்னையைக் கவனிக்க "நல்லெண்ணம்" வேண்டும் — அந்த "நல்லெண்ணம்" அரசியலை ஏற்று நடத்தும் ஆச்சாரியார் அவர்களுக்கு இருக்குமென்று எதிர்பார்க்கிறேன். அவ்வித நல்லெண்ணம் இருக்கிறதென்றால், அதிகாரம் எனும் அம்புறாத்தூணியிலிருந்து எதற்கெடுத்தாலும் அவசரச் சட்டங்களை அள்ளி வீசும் சர்க்கார் புயலுக்கென ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கவேண்டும். புயலால் இரு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டதென்பது, சாதாரண பிரச்னையல்ல. அது ஓர் மாகாணப் பிரச்னை. வதையும் மக்களுக்கு வாழ்வளிக்கவேண்டிய பிரச்னை. ஆகவே, இதற்கென ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டும். செய்யுமா, இந்த சர்க்கார்? சுலபமான வழியில், நஷ்டமடைந்ததை ஈடு செய்துவிடலாம்—தவிப்போருக்கும் நன்மைகள் செய்யலாம். இதை நிறைவேற்ற நல்லெண்ணம்தான் தேவை—அந்த நல்லெண்ணத்தின்பேரால் எனது யோசனையைத் தெரிவிக்கிறேன். "ரூபாய் பத்துக்குமேல், வரி செலுத்துவோர் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் ஒவ்வோர் ரூபாய் செலுத்த வேண்டும்"—இவ்விதம் ஓர் அவசரச்சட்டம் பிறப்பிக்கட்டும். அதற்குப் புயல் நிவாரணச் சட்டம் என்ற பெயர் வேண்டுமானாலும் தரட்டும். நான் ஆதரிக்கிறேன்! இவ்விதம் ஓர் சட்டம் போட்டு, வீட்டு வரியாகவோ நில வரியாகவோ சர்க்காருக்குச் செலுத்துவோர், தாம் செலுத்தும் ஒவ்வோர் பத்து ரூபாய்க்கும் ஒரு ரூபாய் வீதம்—இருபது என்றால் இரண்டு, நாற்பது என்றால் நான்கு, நூறு என்றால் பத்து இந்தவிதத்தில் வரி செலுத்தவேண்டும் என்று சட்டம் பிறப்பித்தால், சுலபமாக வேண்டிய தொகையை வசூலித்துவிடலாம். பாதிக்கப்பட்ட இரு மாவட்டங்களையும் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில், இந்தச் சட்டத்தை அமுல் நடத்தலாம். இவ்விதம் ஓர் சட்டம் பிறப்பிப்பது — அதுவும் நல்லதோர் 'திருபபணி'க்காகப் பிறப்பிப்பது தவறு அல்ல. ஆட்களைக் கொல்லவும், தடிகளைத் தூக்கவும், அவசரச்சட்டங்களைப் பிறப்பிக்கும் அரசாங்கம், அவதியுறுவோரின் கண்ணீரைத் துடைக்க இவ்விதம் ஓர் சட்டத்தைப் பிறப்பிக்கலாம். "தகுதிக்குத் தக்கவரி" அதுவும் ஓர் திருப்பணிக்காக! செய்யுமா, சென்னை சர்க்கார்? முன் வருவாரா முதலமைச்சர்? இவ்விதம் வரி விதித்தால், அதனை வசூலிப்பதற்கென, பிரத்தியேகச் செலவு எதுவும் அரசாங்கத்துக்கு ஏற்படாது. சாதாரண 'கிஸ்தி'களை வாங்க, சர்க்காரின் சிப்பந்திகள் இல்லாமல் இல்லை! 'பில் கலெக்டர்கள்' ஏராளம் இருக்கிறார்கள்! அவர்களைக் கொண்டே, இந்த வரியை வசூலிக்கலாம். சர்க்காருக்கென எவ்வித நிர்வாகச் செலவும் ஏற்படாது. நல்லதோர் காரியத்துக்கு, எவரும் பணம் வழங்குவர். கல்லால் செய்யப்பட்டதாயிருந்தாலும், கண்ணீர் துடைக்கும், இத்திருப்பணிக்கு மனமிரங்கி, தானாகவே, உதவும்! இப்படிப்பட்ட நல்லக்காரியங்களுக்கு உதவ, நம் நாட்டு மக்கள் எப்போதும் தயங்கார்! குருத்துவாழை இலை போட்டு, வெள்ளி போன்ற சோற்றைப் படைத்து, வீட்டு வாயிலைத் திறந்து வைத்து, வரும் விருந்தினரை

(6-ம் பக்கம் பார்க்க)

## புயல் நிவாரண நிதி : : திரட்டுவோம், வாரீர்

பெரும் புயலால் பாதிக்கப்பட்டோருக்கு உதவியளிக்கும் திருப்பணிக்கு உதவும்பொருட்டு, திராவிட முன்னேற்றக் கழகம், ஓர் நிதிக் குழுவை அமைத்துள்ளது. தோழர் மு. கருணாநிதியை செயலாளராகக்கொண்ட இந்தக் குழு, நாடகங்கள்மூலமும், வேறு வழிகளிலும் நிவாரண நிதி திரட்டும் முயற்சியில் முனைந்துள்ளது. இந்தக் குழுவில் அங்கம் வகிப்போர்:

| | |
|---|---|
| சி. என். அண்ணாதுரை | மு. கருணாநிதி |
| கே. ஆர். ராமசாமி | ஈ. வெ. கி. சம்பத் |
| அ. பொன்னம்பலனார் | தில்லை-வில்லாளன் |
| கே. கே. நீலமேகம் | |

புயல் நிவாரண நிதிக்கு, நாடகமூலம் நிதி திரட்டித் தருவதாக பல மாவட்டப் பிரதிநிதிகளும் பொதுச்செயலாளரிடம் தெரிவித்துச் சென்றுள்ளனர். **அதற்கான முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன.**

## அதிர்ச்சி—அனுதாபம்—வேண்டுகோள்

புயலின் கொடுமை குறித்து தஞ்சைப்பொதுக்குழு செய்த தீர்மானம்:—

(அ) சென்ற நவம்பர் திங்கள் 30-ம் நாள் தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளில் அடித்த கடும் புயற்காற்றின் விளைவாக, தஞ்சை—திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகள் சுமார் 370-க்கு மேற்பட்ட ஆடவர்—பெண்டிர்—குழந்தைகள் ஆகியோரை இழந்தும், பெருவாரியான அளவுக்கு வாழை, தென்னை, கரும்பு, வெற்றிலைக் கொடிக்கால், காய்கறிப் பயிர்கள், நன்செய், புன்செய் விளைபொருள்கள் ஆகியவற்றை இழந்தும், ஏராளமான கால்நடைகளைப் பறிகொடுத்தும் பெருந் தொல்லையையும், துயரையும் அடைந்த துன்பச் செய்தியைக் கேட்டும்; பெரு மரங்கள் வேரோடு பெயர்ந்துவீழ்ந்து, சாலைகள் அடைபட்டும், மின்சாரக் கம்பிகள்— தந்திக்கம்பிகள் அறுந்தும், வீடுகளும் பொதுக் கட்டிடங்களும், பள்ளிக்கூடங்களும் பாழாகியும் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது என்ற செய்தியைக் கேட்டும், இப்பொதுக்குழு மன அதிர்ச்சி அடைந்து, பெரிதும் வருந்துகிறது. இந்த உண்மைகளையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்கும்பொழுது, பொருள்கள் இழப்பும் உயிர்கள் இழப்பும், அவற்றால் ஏற்பட்டுள்ள துயரும் தொல்லையும் தாங்கமுடியாதவை என்பது புலப்படுவதால், புயலால் பாதிக்கப்பட்டு வருந்துவோரனைவர்க்கும் இப்பொதுக்குழுக் கூட்டம் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் துயர் களைவதற்கான எல்லா நடவடிக்கைகளையும், உடனடியாகவும், ஏற்ற முறையிலும், திறமையான வகையாலும் கையாளவேண்டும் என்று அரசியலாரை வற்புறுத்துகிறது.

(ஆ) புயலில் அல்லற்பட்டு அவதியுறும் தஞ்சை — திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்குத் தாராளமாக உதவிபுரிய வேண்டியது அவசியமும், அவசரமுமான கடமையாகையால், உணவுப் பொருள்—ஆடைவகைகள் வீட்டு வசதிகள் ஆகியவற்றை வழங்கும் வசதியுடையோர் பெருவாரியாக வழங்கவேண்டும் என்று அன்னார்களைக் கேட்டுக் கொள்வதோடு, ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் இதற்கான முயற்சியில் ஈடுபடலாம் என்றும் இப்பொதுக்குழு முடிவுசெய்கிறது.

(இ) புயல் நிவாரணத்துக்காக நிதி திரட்டுவதற்காக குழு ஒன்றையும் (மேலே தரப்பட்டிருக்கிறது) இப்பொதுக் குழு அமைக்கிறது.

❁

### கிளைக் கழகத்தினரே!

தஞ்சைப் பொதுக் குழுவின் முடிவுப்படி, "கைத்தறியாளர் ஆதரவு நாள்" கொண்டாட, ஆவன செய்யுங்கள். அது சம்பந்தமான பிரச்சாரத்தை, தீவிரமாகச் செய்யுங்கள். விபரத்தை உடனே 'காஞ்சிபுரம்—திராவிட நாடு'க்கு அனுப்புங்கள். கலந்து கொள்வோர் பெயர், இடம் ஆகியவைகளை விளக்கமாக, உடன், எழுதி அனுப்புங்கள்.

## புயல் நிவாரண நிதி

| | |
|---|---|
| மத்திய திராவிட முன்னேற்றக் கழகம் | ரூ. 1000 |
| சி. என். அண்ணாதுரை | ரூ. 500 |
| மு. கருணாநிதி | ரூ. 499 |
| கே. ஆர். ராமசாமி | ரூ. 1500 |

# திராவிடநாடு

காஞ்சி] 21—12—52 [ஞாயிறு


## செத்துக் காட்டினர்! சிந்தை நொந்தோம்!

★

“வீரன் ஒருமுறைதான் சாகிறான்—கோழை அடிக்கடி சாகிறான்!”—என்றோர் பழமொழி உண்டு. அதனை வாய் வலிக்கப் பேசும் அறிஞர்குழாம், ஏராளம். ஆனால், வீரச்சாவால, தன் பெயரைச் சரித ஏட்டில் தீட்டிக்கொள்வோர் தொகை மிக மிகச் சொற்பம் — காண்பதும் அரிது.

சாவது, சகஜம். ஆனால், ‘செத்துக்காட்டுவது’ சாதாரண விஷயமல்ல. அதிலும், தன்னுடைய கொள்கைக்காக, சாவுக்குத் தன்னைத் தத்தம் செய்யும ‘சாக்ரடீசு’களை’க் காண்பது, அரிது—மிக மிக அரிது. அந்த அரிய சாதனையைச் செய்துகாட்டிவிட்டார், ஆந்திர வீரர் ஸ்ரீராமுலு. சாவுக்குத் தன்னைத் தத்தம் செய்தார்! அதுவும் தன்னுடைய கொள்கைக்காக!!

‘செத்தார்’—இந்தச் சொல் சர்வ சாதாரணம். சிறிதுநேரம், கலங்கச் செய்யும்—தேம்பி அழத் தூண்டும் — ஆனால், ‘சேத்துக்கோண்டார்’ என்பது அப்படியல்ல. மனிதனின் சிந்தையில், மாறாத நினைவாகப் படிந்துவிடும். தீரர் ஸ்ரீராமுலு, ‘செத்துக்கொண்டார்’ — நமது சிந்தையெல்லாம் கலங்கச் செய்துவிட்டார்.

கொள்கைகளுக்காக குருதி சிந்தியோர் உண்டு! குத்திக் கொலை செய்யப்பட்ட தியாகிகளும் இருக்கிறார்கள்!—அவர்களெல்லாம், ‘சாகடிக்கப்பட்டவர்கள்’ என்றே குறிக்கப்படுகிறார்கள். ஆனால், ‘செத்துக் காட்டியவர்கள்’ அருமை. அந்தச் சிறப்பறிய செயல்மூலம், தன் கொள்கை உரத்தை, உணர்த்திவிட்டார் — ஸ்ரீராமுலு. சிங்காரமான சென்னையில பிறந்தவர்! ‘பாரத மாதா!’ என்று பாடியவர்—ஆடியவர்—சிறைக்கோட்டம் நாடியவர். அத்தகைய பொதுமக்கள் தொண்டர், ஒரு பொதுக் கொள்கைக்காக தன்னையே ‘இழந்து’விட்டார். பவனி வரும் தோழர்களும், பாராளும் காங்கிரஸ் நண்பர்களும், தன்னைப் பார்த்துக்கொண்டிருக்க, அவர்கள் கண்களிலிருந்து ஒரு சொட்டு நீரும் விழாததைக் கண்டு, தன்னைச் சந்தித்து நம்பிக்கை அளிக்காததைப் பார்த்து, மனம் வெதும்பி தன்னையே மாய்த்துக்கொண்டுவிட்டார்.

‘நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்தார்’ என்று படித்திருக்கிறோம், கதைகளில்—வீரர், பொட்டி ஸ்ரீராமுலு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செத்தார்’. விசித்திரமாக இருக்கும், இது! ஆகா, எவ்வளவு வேதனை கலந்த சம்பவம்!

தான் தூக்கி வளர்த்த மூவர்ணக் கொடி, அழகாகப் பறக்கிறது, அரசாங்க மாளிகையில்—அதன் கீழே தான் வளர்த்த கட்சியின் அரசாங்கம் நடக்கிறது. கொஞ்சும் குழந்தைகளின் மழலை ஒலிக்கிறது! அலையோசை எழுப்பும நீலக்கடல் காட்சி தருகிறது! அழகான ஆகாயம்! அங்கே பறந்து செல்லும் புள்ளினம்! நண்பர்களின் இன்முகம்! அவர்களோடு விளையாடிய தித்திக்கும் நாட்கள்!—இவைகளை எண்ணி எண்ணி, நைந்து நைந்து, தன்னுடைய ‘உள் ஜோதி’யை அணைத்துக்கொண்டுவிட்டார். ஐம்பத்து எட்டு நாட்கள் பட்டினி கிடந்தாராம்! உணவு கிடைக்காததால் அல்ல—உண்ண உணவும், அதைப் படைக்க ஆருயிர்த் தோழர்களும் ஏராளம். ஆயினும் பட்டினி கிடந்தார்! தன்னுடைய கொள்கையை நிறைவேற்றுவதற்காக!!

ஒரு வேளை உணவு கிடைக்காவிடில், துடிக்கும் மனிதர்கள் உண்டு. ஆனால், அவர் 58 நாட்கள் அன்ன ஆகாரமின்றி, கிடந்தார். மாளிகைவாசம் கேட்டுப்பெற அல்ல—மங்களகர வாழ்வு வழங்குமாறு கோரி அல்ல, சம்பள உயர்வுக்காக அல்ல, சர்க்காரில் ‘பீடம்’ பெற அல்ல — தன்னுடைய கொள்கைக்காக.

இந்தத் தியாகம்தான், எல்லோரையும் உலுக்குகிறது. பொது வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்தார்—ஆயுள் முழுதும் பணியாற்றினார் — ஆயுளையும், அதற்காக இழந்து, காட்டிவிட்டார்.

அரசியலில் வளர்ந்துவரும், அலட்சிய அலை, ஒரு அழகான ஓவியத்தை அழியச் செய்து விட்டது.

அதனால்தான் அவரது ‘வீரச்சாவு’ கேட்டதும், கலங்கினோம்! கண்ணீர் வடிக்கிறோம்!!

தியாகி ஸ்ரீராமுலு மேற்கொண்ட உண்ணாவிரதம், சரியா, தவறா?—அது வேறு விஷயம். அவர், கோரிய விருப்பம் தகுமா, தகாதா?—அது, வேறு பிரச்னை. கூடிக் கலந்து பேசவேண்டியது.

ஆனால், அவரது ‘உடல் மெலிகிறது! உயிர் ஊசலாடுகிறது!!’ என்று அறிந்தும், ஊராள்வோர், அவர்பால் காட்டிய அலட்சியம், கொடிது. மிக மிகக் கொடிது.

பண்டிதர் வருத்தம் தெரிவிக்கிறார் — முதலமைச்சர் அனுதாபம் அனுப்புகிறார்—தேசிய ஏடுகள் தீட்டிவிட்டன, வருத்தம் தெரிவித்து. ஆனால், இவையனைத்தும், ‘சாவு’க்குப் பின்னெழுப்பும் சரசக்குரல்கள்! இன்று, சண்டமாருதமெனக்கூவும், இவர்களின் கருத்தும் கவனமும் எங்கே போயிற்று, அவர் ‘அணு அணுவாக’ச் செத்துக் கொண்டிருக்கிறார் எனும் செய்திகள் பரவியபோது? தீட்டினவே, ஏடுகள்! உத்தமரின் பட்டினியைப் பழித்தும், இழித்தும்.

அந்த உலுத்த உள்ளம் தான், ஸ்ரீராமுலுவின், உயிர் குடித்துவிட்டது என்போம். சாகும் நேரத்தில, அந்த தீரரின் இதயம், எவ்வளவு பாடுபட்டதோ! எனனவெல்லாம் எண்ணியதோ!!

ஆந்திர மாகாணப் பிரிவினை, மறைந்த வீரரின் விருப்பம். அதனை, ஆக்கித் தருவதில் பிரச்னைகள் இருக்கலாம்—ஆலோசிக்க வேண்டிய விஷயங்கள் இருக்கலாம். ஆனால், அவரைச் சந்தித்து, விஷயததை விளக்கி, அவர் உயிரைக் காப்பாற்ற ஏன் முயலவில்லை, இந்தியாவின் ஜோதிகள்? எதெதற்கோ, பறந்து செல்லும் பண்டிதர், ஒரு இலட்சிய வீரரின் உயிரைக்காக்க, ஏன் ஒரு முறை வரக்கூடாது? வற்புறுத்தியிருக்கக்கூடாது!

பொட்டி ஸ்ரீராமுலு—ஒரு புரட்சிக்காரரல்ல. அகிம்சாவாதி! உத்தமர் காந்தியின் உண்மைத் தொண்டர்களில் ஒருவர்! தான் சரியெனநினைக்கும் ‘ஆசை’ நிறைவேறாததால், அந்த ஆசையை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பிலிருப்போரின் கவனததைக் கவர, உண்ணாவிரதம் மேற்கொண்டார்—ஒரு நாளல்ல—இரண்டு நாளல்ல—58 நாட்கள்! இந்த விஷயத்தை, பார்லிமெண்டு உறுப்பினர்கள், உரைக்காமலுமில்லை பண்டிதரிடம். இருந்தும், ஏன், தக்க நடவடிக்கை எடுக்கவில்லை? ஒரு உயிர்!—போய்விட்டது. ஒரே ஒரு உயிர்தானே? — எனும் அலட்சியம்தானே! அத்தகைய அலட்சிய மனோபாவம்தானே, கோபத்தோடும் வேகத்தோடும், ‘ஆந்திர மாகாணம்’, குறித்துப் பதில் கூறச் செய்கிறது, பண்டிதரை.

ஸ்ரீராமுலு அவர்களின் விஷயத்தில் மட்டுமல்ல, நீதிகோரும் எவருடைய பிரச்னையிலும் இவ்வித அலட்சியத்தைக் காட்டுவதே, இன்றைய ஆட்சித் தலைவர்களின் போக்காக இருக்கிறது.

இந்த அலட்சியத்தாலேயே, ஒரு உயிர், அநியாயமாக நம்மிடமிருந்து, பிரிக்கப்பட்டுவிட்டது—இந்த அலங்கோலத்துக்கு ஆளான, ‘சுயராஜ்ய’ பூமியை நினைத்து, கலங்குகிறோம்! கண்ணீர் வடிக்கிறோம்!!

பொட்டி ஸ்ரீராமுலுவின் வீரமரணத்தால், ஆந்திர இதயங்கள் வீறுகொண்டெழுந்திருக்கின்றன — விபரீதமான விளைவுகளும் சம்பவித்துக் கொண்டிருப்பதாக, செய்திகள் கூறுகின்றன. வீரரை, ‘அலட்சியம்’ சாகடித்தது — வீரச்சாவு கேட்டு கொதிப்படைந்தோரில் பலரை ‘வேட்டுச்சப்தம்’ சாகடித்துக் கொண்டிருக்கிறது. இந்த விசித்திர வேதனைகளால் அல்லலபடும் ஆந்திரத்தில், அமைதி அரசோச்ச, இனி மேலாவது அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டுகிறோம் — ஆணவ பீடம், அழித்தது ஒரு உயிரை! ஆத்திரவேகம் அழிக்கக்கூடாது பூமியை!!

இந்த வேண்டுகோளை, அரசாங்க பீடத்துக்கும், ஆந்திரத் தலைவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். வீரர், செத்துக்காட்டிவிட்டார்! நம்மோடு கலந்துவிட்டார்!! அவர் காட்டிய அன்பு மார்க்கம், தழைக்கட்டும் — அதன்மூலம் அரசியல் நோக்கங்கள் நிறைவேறட்டும்.

தீரர் ஸ்ரீராமுலுவின் தியாகத்துக்கு, கலங்கும் கண்களைத் துடைத்துக்கொண்டு, நமது மரியாதைகளைத் தெரிவித்துக்கொள்ளும் இந்த நேரத்தில், ஆட்சிபீடத்தாருக்கும் ஒன்று அறிவித்துக் கொள்ளுகிறோம் — “எதையும் அலட்சியமாகக் கருதும்போக்கால் ஒருவரை இழந்துவிட்டோம்! இனியாவது, இந்த மனோபாவம் நீங்கட்டும்!! அரசியல் தொண்டர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்”

★


## திராவிட நாடு

### பொங்கல் மலர்

கருத்தையள்ளும், பொங்கல் மலர் 14—1—53 அன்று வெளிவரும்.

*

சி. என். ஏ. தரும் சிந்தனை விருந்துகள்.

*

அழகிய படங்கள்! அருமையான கருத்துக் குவியல்கள்!!

*

சிறந்து விளங்கும் சிந்தனைப் படையல்!

*

உங்கள் ‘ஏஜண்டு’களிடம் இப்போதே பதிவு செய்துகொள்ளலாம்.

நிர்வாகி, “திராவிட நாடு”


3-ம் பக்கத் தொடர்ச்சி

நமது கண்களில் கட்டப்பட்ட ‘கருப்புச் சிலையை’ அவிழ்த்து விட்டார் பெரியார். எதிரே பார்த்தோம். ஆபத்தும் கொடுமையும் தெரிந்தது. ‘ஐயோ! புறப்படு! போய்விடலாம கரையோரம்’ என்று சுருண்டு வீழ்ந்த மீகாமனை எழுப்பினோம். ‘புறப்படுக! கப்பல் தயார்!!’ என்று தட்டினோம். பதில் இல்லை. கலங்கினோம்—கட்டுமரம் ஒன்றிலே ஏறினோம். சலத்திலே இருப்போரை, இருகை நீட்டி, அழைக்கிறோம். “சுழல் சுக்கு நூறாக்கிடும்—வருக! வருக!! எப்படியாவது கரை சேரலாம்” எனும் அன்போடு. இது தான், தி. மு. கவின் பணி. கட்டுமரத்திலிருந்து கரையோரத்தைப் பார்க்கிறோம்! கரையிலே நீங்கள்—கண்ணியவான்கள்—கை கொடுக்கிறீர்கள்!! இந்தக் காட்சியை நீங்களல்ல—கம்யூனிஸ்டுக் கட்சியல்ல—காங்கிரஸ் அல்ல, சர்க்கார் அறிந்து கொளள வேண்டும். “திராவிட நாடு திராவிடருக்கே!” — எனற முழக்கத்தின் பொருள் அப்போதுதான விளங்கும். அந்த முழக்கம், ஓர் இன அரசின் தத்துவம்! உயர்ந்த லட்சியம், அது — அதனைப்பெற பிணங்கள் வீழலாம் குடும்பங்கள் அழியலாம். ஆனால் அதற்கெனப் புறப்பட்டிருக்கும் படை, தடைவெனறு, உயிர் தந்து தனது தாயகத்தை மீட்கத் தயங்காது. ரத்த ஆறு தேவையென்றால், காட்டத்தயார்! ‘பிணக் காட்டில் நடந்தால்தான்’ என்றால், அதற்கும் தயார்!! என்று உறுதி கூறிடும அணிவகுப்பை நாம் பலப்படுதத வேண்டும். வியர்வையும், உழைப்பும் போதாது! அடக்குமுறை ஈட்டிக்கு மார் காட்டுவது மட்டும் போதாது! அணி அணியாகப் படைவரிசை இருக்கவேண்டும். அழைப்பு கிடைத்ததும், ஒரு சொட்டுக் கண்ணீர்! — சிந்திவிட்டு, அலை அலையாக, மேலும் மேலும், புறப்படவேண்டும். அத்தகைய அறப்போருக்குத் தயாராக, கழகங்களெல்லாம் பாசறைகளாக மாற வேண்டும்! கோட்டைகளாக விளங்க வேண்டும்! ஒவ்வொருவரும் வீரனாக நடைபோட வேண்டும்! எல்லோரும் தளபதிகளாக ஆகவேண்டும்! இதற்கு எத்தனை பேர், தயார்? [கூட்ட முழுமையும், ‘தயார்! தயார்!!’ என கைதூக்கியது] மகிழ்கிறேன்—இந்தக் கரங்களிலே வாளில்லை! அதைப் போல கருத்திலே வஞ்சகமில்லை!! இதுவா, சிறுபிள்ளைத்தனம்? இல்லை! இல்லை!! மிகப் பெரிய மனிதர்—இதையறியாது மிகச் சாதாரணவார்த்தை சொன்னார். மறப்போம்! மன்னிப்போம்!! நாம் வடபாதி மங்கலங்களல்ல — தர்மபுரமல்ல — திருவாவடுதுறையல்ல. ஏழுடுக்கு மாளிகை கிடையாது. தரைதான் நமக்கு ரத்னஜமுக்காளம்! கைகள் தான நமக்குத் தலையணை!! இருந்தபோதும், வளர்கிறோம்—அத்தகைய ஜீவசக்தி நமது கொள்கை. அதற்கு ஆதரவு தரும் படைபலம், அதிகமாகிறது. அதனை வளர்ப்போம்! வாழ்வோம்!!

✲


## புதிய நூல்கள்

ஆசைத்தம்பி

| | |
|---|---|
| வழக்கு தீர்ப்பு | 0—8—0 |

காஞ்சி–செங்குட்டுவன்

| | |
|---|---|
| ராணி | 1—0—0 |

கே. ஜி இராதாமணாளன்

| | |
|---|---|
| பசி | 1—0—0 |
| வெங்கண்ணு | 1 0—0 |
| கிளியோபாட்ரா | 1—8—0 |
| அழகுராணி | 1—4—0 |

விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனம்.

விபரங்களுக்கு:—

எம். சூரி,
14-A. குப்பையா தெரு,
சென்னை–1.

தி.மு.க.

# ஓர் அருமையான ஓவியம்! அறியட்டும் எதிரிகள்!!

## பொதுச் செயலாளர் முழக்கம்

[நிருபர்]

14—12—52 அன்று பொதுக் குழுக் கூட்டம் முடிந்ததும், தஞ்சை தி.மு.க. சார்பில் தோழர் எஸ். பெத்தண்ணு தலைமையில மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளரைப் பாராட்டி நடைபெற்ற அப்பொதுக் கூட்டத்தில், தஞ்சையே இதுவரை கண்டிராத அளவுக்குப் பொதுமக்கள் திரண்டிருந்தனர். கழக முன்னணி வீரர்களான தோழர்கள் இரே. இளம்வழுதி, எம்.ஏ., பி.எல்., திராவிடன் ஆசிரியர் என். வி. நடராசன் கே. எ மதியழகன் பி.ஏ., ஈ.வி.கே. சம்பத், கலைஞர் மு.கருணாநிதி, நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின், தோழர் கே. ஆர். ஆர். "கன்னித் தமிழ்ச் சாலையோரம்" எனும் அழகிய பாடலைப் பாடினார். பிறகு, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச்செயலாளருக்கு, மாவட்டச் செயலாளர்கள் மலர் மாலை சூட்டினர் — தனிப்பட்ட கழகங்களும் மாலைகளைச் சூட்டி, மேடையில 'மாலை மலை'யை உருவாக்கினர். தனக்கு அளிக்கப்பட்ட பெருமித பாராட்டுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, தோழர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றியபோது குறிப்பிட்டதாவது:—

"என்மீதுள்ள அன்பின் காரணமாக, இங்கே மலர் மாலைகளையும், நல்ல சொல் மாலைகளையும் சூட்டியிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நீங்கள் அளித்த மலர்மாலைகளை, எனக்கு அளித்ததாகக் கருதமாட்டேன்—நாம் வளர்க்கும் இயக்கத்தின் முதல் தொண்டனுக்கு அளித்ததாகவே கருதுகிறேன். இந்தக் காட்சியை, 'நான்சென்ஸ்' என்று பேசிவிட்டுச் சென்றதாக எனக்கு முன் பேசிய தம்பிமார்கள் குறிப்பிட்டார்களே அந்த நேரு கண்டிருக்கவேண்டும். மிகச் சாதாரண இயக்கம்—'அவர்கள்' சொற்படி. அந்த மிகச் சாதாரண இயக்கத்தின் மிகச் சாதாரணத் தொண்டன் நான். என்மீது நீங்கள் காட்டும் அன்பை, 'நான்சென்ஸ்' என்று வீசிச் சென்ற பண்டித நேரு கண்டிருக்கவேண்டும். பல்லாயிரக் கணக்கில் இங்கே நீங்கள் கூடியிருக்கிறீர்கள் — கண்ணுக்கெட்டியதூரம் பார்க்கிறேன்! எங்கும் தலைகள்தான் தெரிகின்றன! இந்த அளவுக்கு நீங்கள் கூடியிருப்பதேன்? "இந்தக் கழகத்தார் என்ன சொல்லப்போகிறார்கள்?" எனும் எண்ணத்தால், நாட்டின் நலிவு குறித்து நாங்கள் கூறுவது என்னவென்பதை அறியும் ஆசையோடுதான் கூடியிருக்கிறீர்கள. இதற்குப் பெயரா 'நான்சென்ஸ்?' ஒரு அரசியல் கட்சியின் கொள்கைகளை அறிய லட்சக்கணக்கில் மக்கள் கூடுகிறார்களென்றால் அதை 'நான்சென்ஸ்' என்று மதிப்பிடுவது? இந்த மலர் மாலைகளா நான்சென்ஸ்! இங்கே கூடியிருக்கிறார்களே மக்கள், அதுவா நான்சென்ஸ்! அல்ல—அல்ல. இதற்குப் பெயர்தான் தேசீயம்! இன உணர்ச்சி!! மாபெரும் விடுதலை வேட்கை!!! இதனைத்தான் Childish, Nonsense என்கிறார் பண்டிதர். இம்மாபெரும் கூட்டங்களை அவர் கண்டறியார். நம்மிடை வளர்ந்திருக்கும் இன உணர்ச்சியின் அளவை, அவர் அறியவில்லை. எனக்குமுன் பேசிய தம்பிமார்கள், 'நான்சென்ஸ்' என்று கூறியோரெல்லாம் எக்கதியாயினர் என்பதை சரித ஆதாரங்களோடு விளக்கினர்—காரசாரமாகக் கண்டித்தனர். நேரு அவர்கள் இவ்வித வார்த்தையை உச்சரிக்கச் செய்தது எது?—என்பதையே நான் சிந்தித்தேன். நம்மைப்பற்றி, மிகச் சாதாரண இயக்கம் என்றே அவர் கருதியிருந்தார். நம்மைப்பற்றி பேசுவதே, தமது அந்தஸ்துக்கேற்றதல்ல என்று கருதும் கூட்டம், அவர். அத்தகைய நெஞ்சு, இன்று, நம்மைக் கண்டு 'நான்சென்ஸ்' என்று கூறுகிறது. அவர், 'நான்சென்ஸ்' என்று கூறினாரே என்று ஆத்திரப்படுவதைவிட, அவர் அவ்விதம் கூறுமளவுக்கு — அவரது சிந்தையைக் கொட்டுமளவுக்கு—நம்முடைய பிரச்சினை வளர்ந்திருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். பண்டிதர் மிகப் பெரியவர்—நம்மைப்பற்றி கருதவே விரும்பாதவர். இப்போது 'நான்சென்ஸ்' என்று கூறும் கட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார். அவர், இதுபோன்ற மாபெரும் கூட்டங்களைக் கண்டதில்லை! நமது வளர்ச்சியும் அவருக்குத் தெரியாது. அவர் வந்தால்,காலை உணவு மைலாப்பூரில், நண்பகலுக்கு திருவல்லிக்கேணி இரவுக்கு அடையாறு க்ஷேத்திரம். அங்கே இருப்போர், நம்மைப்பற்றிய உண்மையையா, அவருக்குச் சொல்வார்கள்? சொன்னாலும், 'அது ஒரு நான்சென்ஸ்' என்ற அளவில்தான் முடித்துவிடுவார்கள். மாலைக் கூட்டத்திலே, Childish, Nonsense என்ற சுடு சொல்லை வீசிய பண்டிதர், அன்று காலையில் 'பாலமந்திர்'க்குச் சென்றதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். அவர் இப்போதெல்லாம் அடிக்கடி குழந்தைகளிடம்கொஞ்சிக்காலம் கழிப்பதாகவும் அறிகிறேன். பாலமந்திரில் பாடி ஆடிய குழந்தைகளின் காட்சி அவருடைய உள்ளத்தில் மறையவில்லை போலும். ஆகவேதான், அந்தக் குழந்தையின் தன்மையிலேயே கூறியிருக்கிறார், இந்தச் சொல்லை. மிகப் பெரியவர் அவர்; ஆனால். மிகச் சாதாரண வார்த்தையைக் கொட்டியிருக்கிறார். மன்னிப்போம்.

மூன்றாண்டுக் குழந்தை, நமது கழகம். இன்று 'இந்தி' முகத்தில் தார் பூசியதுபோல, இந்தக் குழந்தை வளர்ந்து, மார்வாடிகளின் முகத்தில் கரி பூசத் தயங்காது. அப்போது என்ன சொல்வார், பண்டிதர்? Boyish Frank என்று சொல்லலாம்! இன்னும் வளர்ந்து இளைஞனாகிவிட்டால்,அதன் செயல் கண்டு Youthful - encumbrance (தொல்லை) என்று அவர் சொல்லும்படி வைப்போம்! 'நான்சென்ஸ்' என்று நம்மைப் பார்த்துக் கூறிய பண்டிதர் மறந்திருக்கமாட்டார் எனக்கருதுகிறேன். மறந்திருந்தால் கவனப்படுத்துகிறேன்—வளரும்விடுதலை ஆர்வத்தைக் கண்டு, இவ்விதம் தான் அழைத்திருக்கிறார்கள்,ஆதிக்கக்காரர்கள். அதிலும், பண்டிதரின் நிலை, தாடி நரைத்து, தடியேந்தும் பருவம். மறந்துவிட வேண்டாம்! "Oldman's Wisdom" பயனளிக்காது!! எனினும், இந்தச் சாதாரண வார்த்தையை வீசியிருக்கிறார்.மிகப் பெரிய மனிதர்! மிகச் சாதாரண சொல்!! மன்னிப்போம் — மறப்போம்.

என்றும் Childish ஆக இருந்துவிடமாட்டோம். அவர் கண்ணெதிரிலேயே, பையனாகவும், இளைஞனாகவும் வளரத்தான் செய்வோம். அவ்வித வளர்ச்சிக்கேற்ற வகையில் நாம் நம்மைத் தயார் செய்துகொள்ளவேண்டும். ஒவ்வொரு கழகமும் கழகக் கோட்டையாக இருக்கவேண்டும்! கழகம் இல்லாத பட்டிதொட்டி இருக்கவேகூடாது! எங்கே போனாலும், தி. மு. க. கொடியோ அல்லது தி. க. கொடியோ— இரண்டில் ஏதாவது ஒன்று பறக்கவேண்டும். இவ்வித நிலை ஏற்படட்டும். ஒரு ஆறு மாத காலம். பிறகு, அவரை அவரே தெரிந்துகொள்ளச் செய்கிறேன்!

மாபெரும் இயக்கமாக வளர்ந்திருக்கும் நம்மை மதிக்காதது, ஏன்? நம்மைப்பற்றி அவர் அறியமுடியாமல் தடுக்கப்படுகிறார். இருட்டடிப்பு, செய்யப்படுகிறது. நமது பிரச்னைகளை அறியமுடியாமல 'விந்தியம்' குறுக்கே நிற்கிறது. அதற்கப்பால் நம்மைப் பற்றி அறியாதோர் தொகை, அதிகம். இந்தநிலைகண்டு, புண்படத் தேவையில்லை, நாம். முன்னைவிட, இப்போது நமதுநிலை என்ன? நேற்றையவிட இன்று வளர்ந்திருக்கிறோம்! இன்றைவிட நாளை வளர்வோம்!! நேற்று நம்மைக் கண்டவர்கள் இன்று நம்மைக் காணும்போது, ஏதாவது கூற வேண்டியவர்களாகிறார்கள் — ஆளவந்த ஆணவம், அவர்களை, ஏதாவது கக்கச்செய்கிறது!—கக்குகிறார்கள்! எனும் வார்த்தையை அதன் அர்த்தத்தோடுதான் உபயோகிக்கிறேன். ஜீரணமாகாதது கக்கப்படும்! நமது விஷயங்கள், அவர்களால் ஜீர்ணிக்கப்படமுடியவில்லை. ஆகவே; கக்குகிறார்கள். எவ்விதம் ஜீர்ணிக்கமுடியும் அவர்களால்? மயிலையும் திருவல்லிக்கேணியும் நம்மைப்பற்றி 'மாபெரும் இயக்கம்' என்று, பண்டிதரிடம்கூறும்? 'இது என்ன?' என்று அவர் கேட்டாலும் 'ஏதோ நான்சென்ஸ்!' என்றுதானே சொல்வர். எவ்விதம், நமது விஷயம், ஜீரணமாகமுடியும்? அதனால்தான், அவர் பேசினார் என்று நான் சொல்லவில்லை! கக்கினார் என்கிறேன்!!

மிக மிகச் சாதாரணமானவர்கள்—நாம. ஆனால் நமது வளர்ச்சிசாதாரணமானதல்ல. கட்டை வண்டி ஓட்டுபவர்கள்,சிறுகடைக்காரர்கள், கல்லூரிக் காளைகள், விவசாயவீரர்கள், பாட்டாளி மக்கள் எல்லோரும் திரண்டிருக்கிறார்கள். பண்டித நேருவின் ஒற்றர்களை, அறைகூவி அழைக்கிறேன்! இல்லையென்று கூறமுடியுமா?

பக்திப் பாசுரம் பாடியல்ல, இவர்களைச் சேர்த்தது. ஜொலிக்கும் சீமான்கள் அல்ல, நாங்கள்! புயல் நிவாரணத்துக்கு ரூ 25,000 சேர்க்கலாமென்றால், பத்து ஊர்களில் நாடகமாடவேண்டிய நிலைதான் எங்களுடையது. வேஷம் தடவும் போது, பிறர் வீசும், நையாண்டிகள் எங்கள் உள்ளத்தைத் துளைக்கவா, செய்யாது? இருந்தாலும், ஈடுபட்டுச் செய்கிறோம்! 'இந்தா!' என்று பொக்கிஷத்தைத் திறந்து விடக்கூடியவர்களா? சர்வேஸ்வரனைக்காட்டி 'இதுவே சர்வரோக நிவாரணி' என்று சொல்பவர்களா? பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமிடையே, இருக்கும் உறவைப் பற்றி, உபன்யாசம் செய்பவர்களா? பணபலம் கிடையாது எங்களுக்கு—பத்திரிகைபலம் இல்லை எமக்கு—அருள்பலம் கிடையாதுஎங்களுக்கு. மிகமிகச் சாமான்யர், நாங்கள்! இருந்தும் எங்கள் கழகம் வளரலானேன்? எழில்மிக்க ஓவியமாகத் திகழ்வானேன்! இதோ, காட்சியளிக்கிறது எழில் மிக்க ஓவியம்—இதனைக்காண நேரமில்லை, நேருவுக்கு. எதிரிகளின் கேவலச் சொல், எங்களை எப்போதும்வாட்டச் செய்ததில்லை வளர்ந்தே இருக்கிறது. ஆரம்பகாலமுதல் எதிர்க்காதோர் யார்? தூற்றியோர் தொகை எவ்வளவு! துடுக்கனமென்றோர் எத்தனைபேர்! 'அழியப்போகிறார்கள்—பாருங்கள்' என்றோர் ஆயிரமாயிரம். அவர்களின் ஆரூடம் பொய்த்துப் போய்விட்டதே! அழியவில்லையே நாங்கள்!! என்ன காரணம் இதற்கு? எதிரிகளின் கணைகளைத் தாங்கி, எதிர்த்து வளரக்கூடிய ஜீவசக்தி எங்களிடம் இருக்கிறது. இவ்வளவு எதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு, வளர்ந்த இயக்கம், வரலாற்றிலே உண்டா? பெரியாரின் மொழிப்படி, 'வைரம் பாய்ந்தது இரண்டாக ஆயிற்று' ஆனால், முன்னைவிட முறுக்கும், சிறப்பும்தானே காட்சியளிக்கிறது! 'இரண்டானால் என்னகதி தெரியுமா?' என்றனரே—அவர்களை அழைக்கிறேன். இந்தப் பொலிவையும், இப்போது ஏற்பட்டிருக்கும் வலிவையும் மறுக்க முடியுமா, உங்களால்? இவ்விதம், இரண்டாக ஆகி, வளர்ந்திருக்கும் இயக்கத்தை வரலாற்றிலே காட்ட முடியுமா? என்ன சூட்சுமம் இதற்கு? எண்ணிப் பாருங்கள்! ஒரு இனம் தன்னை உணர்ந்து கொண்டுவிட்டது. இந்தஉண்மையை உணரவேண்டும். இந்தஜீவசக்தியை அறிந்துகொள்ள வேண்டும்.

கடலிலே கப்பல்! சுழன்றடிக்கும் சூறாவளி! வாய்திறந்து வரும் சுறாக் கூட்டம்! சுறா—சூறாவளி — சுழன்றடிக்கும் புயல் — கொந்தளிக்கும் கடல்—தத்தளிக்கும் கப்பல். மீகான் கண்டுண்டுகிடக்கிறான்! அவன் கண்களிலே கருப்புச்சீலை — கால்களும் கைகளும் கட்டப்பட்டு கப்பல் தளத்திலே கிடக்கிறான். கலமோ, ஆடுகிறது! அங்குமிங்கும் தத்தளிக்கிறது! ஆபத்து தெரிகிறது. 'அரை நொடியில என்ன ஆகுமோ?' என்று அஞ்சுகிறார்கள், தளத்திலேயிருப்போர். ஆபத்தையுணர்கிறான். கட்டுகளைக்கடிக்கிறான் — கைகளை அவிழ்த்துக் கொள்கிறான்—கண்ணிலுள்ள திரையை அகற்றுகிறான் — கடலைப்பார்க்கிறான். கப்பல, தவிக்கிறது— கடலோ — அழைக்கிறது. ஒரு பக்கம், ஓட்டையாகி, உள்ளே தண்ணீர். கடல்! கலம்! ஆட்டம்! அலை!—மீகானே, ஓட்டைக் கப்பலில்! எதிரே, பார்க்கிறான். ஆபத்தின் அளவு தெரிகிறது. வாய்திறக்கிறான்! 'ஐயோ, கண் கட்டப்பட்ட நிலையில் இல்லையே! இந்தக் கண்றாவியை எப்படிப்பார்ப்பேன்! சகிக்க முடியவில்லையே!!" என்று கலங்குகிறான்—தன்னைச் சுற்றியிருப்போரைப் பார்த்துப் பரிதாபப்படுகிறான். தாங்காத சோகத்தால் சுருண்டு வீழ்கிறான்.

(2-ம் பக்கம் பார்க்க)

## அனுதாபம்

பதினைந்து ஆண்டு காலமாக காஞ்சியில் திராவிடரியக்கத்திலீடுபட்டு வந்தவரும், சிறந்த பொதுநல ஊழியருமான தோழர் ஆபீசா என்கிற H. M. அப்துல்காதர் அவர்கள் கடந்த 1–12–52 அன்று இரவு 7½ மணிக்கு இயற்கை எய்தினார் எனும் செய்தியை அறிவிக்க மிகவும் வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு நமது ஆறுதல்.

# கைத்தறித் துணிகளை கழகத் தோழர் வீதிகள்தோறும் விற்பனை செய்வர்!

# ஜன. 4: நெசவாளர் ஆதரவு நாள் கொண்டாடப்படும்

## கைத்தறி உடுத்துவோம் கண்ணீர் துடைப்போம்!!

## ''நூல் விலையைக் குறை! விற்பனை வரி வேண்டாம்! சாய இறக்குமதி வரியை ரத்து செய்க''

கைத்தறிப் பிரச்னை குறித்து தஞ்சைப் பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானமாவது:—

(அ) கரைபோட்ட வேட்டிகளையும், புடவைகளையும் கைத்தறிக்கே ஒதுக்கி வைக்க வேண்டுமென்று சென்னை முதலமைச்சர் கொண்டு வந்த தீர்மானத்தை இப்பொதுக் குழு ஆதரிக்கிறது என்றாலும், 36 அங்குலத்திற்குட்பட்ட துணிகளையே மில்கள் உற்பத்தியாக்க வேண்டும் என்ற சட்டமும் இயற்றப்பட வேண்டும் என்றும் இப்பொதுக் குழு வற்புறுத்துகிறது.

(ஆ) தீர்மானத்தை முதலமைச்சர் நிறைவேற்றியிருப்பது மட்டும் பிரச்சினையைத் தீர்க்கும் வழியாகாது என்பதோடு அதற்கான நடவடிக்கைகள் எடுக்காமல் வாளாயிருப்பது வெறுங் கண்துடைப்பு வேலையாகும் என்றும் இப்பொதுக் குழு கருதுகிறது.

(இ) கைத்தறி நெசவாளர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கும் இந்த நாளில், கட்டாய கூட்டுறவு முறை போன்ற அவசரமும், அவசியமும் உறுதிப்பாடும் கொண்ட நடவடிக்கை முக்கியமாகும் என்றும் இப்பொதுக் குழு அரசியலார்க்கு எடுத்துக்கூற விரும்புகிறது.

(ஈ) மத்திய அரசாங்கத்தார், வழி வகுக்கும் வரையில் சென்னை அரசாங்கம் வாளா இருக்காமல் வேலையில்லாது தவித்திடும் நெசவாளர்களுக்கு, ஏற்ற வேறு வேறு வேலைகளைக் கொடுத்துக் காப்பாற்றும் முயற்சியில் அக்கரைசெலுத்த வேண்டும் என்றும் இப்பொதுக் குழு அறிவுறுத்திக் கூற விரும்புகிறது.

(உ) கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஆதரவுதரும் வகையில் பொது மக்களின் கருத்தை ஈர்க்கவும், தென்னாட்டுக்கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைக்கவும், 1953 ஜனவரித் திங்கள் 4-ம் நாளை ''கைத்தறியாளர் ஆதரவுநாள்'' எனக்கொண்டாடும்படி தென்னாட்டு மக்களை இப்பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது. ஊர்வலங்கள் நடத்துதல், கைத்தறித் துணிகளை ஆதரிக்கக் கோரி ஒலி முழக்கம் எழுப்புதல், பொதுக் கூட்டங்கள் கூட்டி கருத்து விளக்கம் செய்தல், ஆகிய பணிகளை விழாவின்போது நிகழ்ச்சிகளாகக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறது.

(ஊ) 1953 ஜனவரித் திங்கள் 4-ம் நாளில் கீழ்க்கண்ட இடங்களில், கைத்தறித் துணிகளை வாங்கும்படி தூண்டும் பணியினை விழாவின் நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கருதி தொண்டுபுரிய கீழ்க்கண்டவர்களைத் தேர்ந்தெடுப்பது என்றும் பொதுக் குழு முடிவு செய்கிறது.

[விபரம்;நமது இதழின் இந்தப்பக்கத்திலேயே தரப்பட்டிருக்கிறது]

(எ) நூல்விலையை 1945-ம் ஆண்டிலிருந்த அளவுக்குக் குறைத்துவிட வேண்டும்.

(ஏ) சாயமருந்துகளுக்கு இறக்குமதி வரியை ரத்து செய்ய வேண்டும்.

(ஒ) கைத்தறித் துணிக்கு விற்பனை வரியை அடியோடு ஒழிக்க வேண்டும்.

(ஓ) பட்டினியால்வாடுகின்ற ஏழை நெசவாளர்களுக்கு வயது பேதங்காட்டாமல் நிவாரணம் அளிக்கவேண்டும்.

## அவதிப்படும் தாயகத்துக்கு ஆதரவு தாரீர்!

### திராவிட முன்னேற்றக் கழக திட்டம்

1953 ஜனவரி 4-ந்தேதி முன்னணி வீரர்கள், நாட்டின் பல பாகங்களிலுள்ள ஊர்களில் கைத்தறித் [illegible]த்துக்கொண்டு, வீதி வீதியாக — வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வர்.

பொதுச் செயலாளர் அ[illegible]ச்சி நகரத்தில், கைத்தறித் துணி விற்பனையிலீடுபடுவார்.

கைத்தறியாளரின் பிரச்னை[illegible]ளோர் அறியவும், வதையும் நெசவாளரின் துயர் போக்கும் வகையில் [illegible] தூண்டவுமான நாளாக, ஜனவரி 4, திகழும்.

வடநாட்டு ஆலைகள் கொண்டுவந்த துணி, தடுக்கப்படவில்லை. ஆலைகளோடு போட்டி போடமுடியாத, கைத்தறித் துணிகள், வாங்[illegible]கிடக்கின்றன! உழைத்தும் நெசவாளர் வாழ முடியவில்லை. விளைவு—பட்டினி! வீதியிலே பிணத்தைச் சாக்கடையாக்கும் இக்கேட்டைத் தீர்க்க வேண்டிய காங்கிரஸ் சர்க்காரோ 'தீர்மானம்[illegible]டு இருக்கிறது.

**பொங்களே!**

**வாடும் நெசவாளர் வாழச் செய்ய**

**வழி செய்வாருங்கள்!!**

## தி. மு. கழக தேர்தல் பஞ்சாயத்து

கழகச் சட்டதிட்டப்படிநடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல்களில் ஏற்பட்ட சிக்கல்களை கவனித்து ஆவன செய்வதற்காக மூன்றுபேர் கொண்ட 'தேர்தல் பஞ்சாயத்து' தஞ்சைப் பொதுக் குழுவில் அமைக்கப்பட்டது. கழகத் தேர்தல்கள் சம்பந்தமான சகல குறைகளும், இந்தப் பஞ்சாயத்தின் கவனத்துக்கே, வைக்கப்படும். இதுசம்பந்தமான பணியைச் செய்ய இவர்களை அழைக்கும் கிளைக்கழகத்தார், இந்த மூவருக்கான போக்குவரத்துச் செலவில் பாதியை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும், பாதியைத் தலைமைக் கழகம் ஒத்துக்கொள்ளுமென்றும் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

அந்த மூவர்:—

சென்னை என். வி. நடராசன்,

ஈரோடு எஸ். ஆர். சந்தானம்

தூத்துக்குடி

இரா. சு. தங்கப்பழம்.

## ''கூலியை உயர்த்து! சாகுபடி காலம் போதாது, இடைத் தரகர்களை ஒழி, 'பண்ணையாள்' பெயர் வேண்டாம்''

சென்னை அரசியலார் விவசாயிகள் சம்பந்தமாக அண்மையில் நிறைவேற்றியுள்ள சட்டம் குறித்து பொதுக்குழு, விவாதித்து நிறைவேற்றிய தீர்மானம்:—

(13) தஞ்சை மாவட்டச் சாகுபடியாளர் பண்ணையாள் பாதுகாப்பு மசோதா கீழ்க்கண்ட காரணங்களால் குறைபாடுடையதாகக் காணப்பட்டாலும், பொதுப்படையாக நோக்கும்போது அதனுடைய குறிக்கோள்கள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியவையாகும் என்று இப்பொதுக் குழு முடிவுசெய்கிறது.

குறைபாடுகள்

(1) அதனுடைய குறிக்கோள்கள் மாநிலம் முழுவதும் அமுலாக்கப்படாமல் தஞ்சையில மட்டுமே அமுலாக்கப்படும் தன்மையிலிருப்பது.

(2) சாகுபடியாளர்களின் உரிமைகள் போதுமான அளவுக்குக் காப்பாற்றப்படவில்லை.

(3) தொழிற்சாலைகளைச் சார்ந்த தொழிலாளர்க்கு அளிக்கப்படும் வசதிகள், உழவுத் தொழில் புரிவோர்க்கும் அளிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்டவசதிகள் மசோதாவால் உறுதியாக்கப்படவில்லை.

(4) குத்தகை காலம் ஐந்து ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருப்பதும் 40 o/o பங்கு என்று விதித்திருப்பதும் போதுமானவையல்ல என்பதோடு உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கம் அளிப்பவையும் ஆகா. காலத்தின் அளவும் விகிதத்தின் அளவும் உயர்த்தப்படும்.

(5) ''பண்ணையாள்'' என்ற பெயர் அடிமைத்தன்மையின் சின்னமாக இருப்பதால், ''விவசாய தோட்டத் தொழிலாளி'' என்பது போன்ற சிறந்த பொருத்தமான பெயரால் அழைக்கப்பட வேண்டும்.

(6) பண்ணையாட்களுக்குக் குறிப்பிடப்படும் கூலி மிகவும் குறைந்த பட்ச கூலி விகிதத்திற்கும் குறைவாகவே கூலி நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

(7) இடையிலுள்ள தரகர்களை போக்குவதற்கு மசோதா, ஒரு ஏற்பாடும் செய்யவில்லை.

## பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானங்கள்

தஞ்சையில் கூடிய தி. மு. க. பொதுக்குழு, நாட்டின் பல்வேறு பிரச்னைகளையும் ஆராய்ந்து, நிறைவேற்றிய தீர்மானங்களின் விபரம் இது. [சில தீர்மானங்கள் வேறிடங்களிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.]

**6. நேருவின் கூற்று**

அவசியமற்ற — வேண்டாத வடநாட்டு இந்தியை, இந்தி ஏகாதிபத்ய ஆதிக்கத்தின் அறிகுறியாகத் திராவிட நாட்டிலுள்ள புகைவண்டி நிலையங்களின் பெயர்ப்பலகைகளிலும், அஞ்சல், நிலயங்களின் பெயர்ப் பலகைகளிலும் புகுத்தியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற எதிர்ப்பின் அறிகுறியாகக் காரண காரியங்கள் பல காட்டி, இறுதியாகத் தாமே அதனை அழிக்கும் செயலை மேற்கொண்ட அறப் போர் வீரர்கள் போக்கை ''சிறுபிள்ளைத்தனமான அறிவீனம்'' என்று சுட்டிக்காட்டிய பண்டித நேருவின் கூற்றைக் கேட்டு இக்கூட்டம் வருந்திக் கண்டனந் தெரிவித்துக்கொள்வதோடு, பொறுப்பு வாய்ந்த பதவியில் வீற்றிருக்கும் அவரைப் போன்றவர்கள் இப்படிப்பட்ட இழிமுறையில் இறங்குவது அழகல்ல என்று அறிவுறுத்திக் கூறவும் விரும்புகிறது.

7. மாணவர்களை வடிகட்டும்முறை.

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் ஆறும் படிவத்தில் மாணவர்களை வடிகட்டி, எஸ். எஸ். எல். ஸி. தேர்வுக்கு அனுப்புவது என்ற முறையை புகுத்தியிருப்பது, சுட்டுப்பாட்டின் போரால் மாணவர்களின் கல்வி ஆர்வத்தையும் கல்வியின் முற்போக்கையும் தடைசெய்வதாகுமே யல்லாது உறுபயன் ஏதும் தராது. இந்த முறை ஏழை மாணவர்களுக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவும், மனத்தளர்ச்சி தருவதாகவும் அமைந்திருப்பதால், வடிகட்டும் முறையை அகற்றி, எஸ். எஸ். எல். ஸி. தேர்வில் நேரிடையாகவே தம் திறமையைக் காட்டுவதற்கான வாய்ப்பை எல்லா மாணவர்களுக்கும் அளிக்கவேண்டும் என்று இப்பொதுக்குழு அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

**மாணவர்களை வடிகட்டாதே!**

**தமிழாசிரியருக்கு நீதி வழங்குக.**

## சொத்துப் பாது காப்புக்குழு

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கென இருக்கும் தலைமைக் கழகச் சொத்துக்களையும் கிளைக் கழகச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கென பதினொரு பேர் அடங்கிய குழு ஒன்றும், அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில், மேலும் நால்வர் இணைக்கப்படுவர்.

மூன்றாண்டுகளில் அரும்பி, மலர்ந்த தி. மு. க. தனது அருந்தொண்டர்களின் ஒத்துழைப்பால் சேகரித்திருக்கும் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, இந்தக் குழுவைச் சார்ந்ததாகும். இந்த 'டிரஸ்ட்', தஞ்சைப் பொதுக் குழுவில் அமைக்கப்பட்டது.

இதில் அங்கம் வகிக்கும் தோழர்கள்:

தஞ்சை கே. கே. நீலமேகம்

சேலம் ஜி. பி. சோமசுந்தரம்

மதுரை முத்து

ஈரோடு ஈ. வெ. கி. சம்பத்

திருவண்ணாமலை ப. உ. சண்முகம்.

சென்னை என். வி. நடராசன்

இரா. நெடுஞ்செழியன்

விருதுநகர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி

மாயவரம் இராமாமிர்தத்தம்மையார்

திருச்சி பராங்குசம்

சி. என். அண்ணாதுரை

## ஜன. 4-கைத்தறி ஆதரவுநாள்

**ஜன 4** — **ஞாயிறு அன்று**

ஊர்வலம்! கூட்டம்!

நாடெங்கும் நடைபெறும்

தறியாளர்களுக்கு ஆதரவோம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தஞ்சைப் பொதுக்குழு தீர்மானப்படி, ஜனவரி 4-ந்தேதியன்று நடைபெறும் ''கைத்தறியாளர் ஆதரவு நாளில்'' கீழ்க்கண்ட இடங்களில், தி. மு. க முன்னணி வீரர்கள், வீடுவீடாகச் சென்று கைத்தறித் துணிகளை விற்பனை செய்வர்.

திருச்சி

பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

தில்லை. வில்லாளன்

இசை முரசு ஹனீபா

எம். எஸ். மணி

பராங்குசம்

சென்னை

மு. கருணாநிதி

கே. எம். கண்ணபிரான்

கே. ஆர். செல்லமுத்து

சைதாப்பேட்டை

சி. வி. ராஜன்

காஞ்சிபுரம்

நடிப்புப்புலவர்

கே. ஆர். ராமசாமி

கே. டி. எஸ். மணி

செ. கோ. பெருமாள்

டி. சபாபதி

வேலூர் (வ. ஆ.)

காஞ்சி மணிமொழியார்

ஏ. எல். சி. கிருஷ்ணசாமி

[illegible]ராயணசாமி

திருமங்கலம்

இரா. சு. தங்கப்பழம்

தர்மன்

நாகர்கோயில்

என். எஸ் இளங்கோ

காரைக்குடி

இரா. நெடுஞ்செழியன்

கண்ணதாசன்

இராம. சுப்பையா

வெள்ளையன்

விருதுநகர்

ஏ. கே. வேலன்

ஸ்ரீவில்லிபுத்தூர்

எம். எஸ் ராமசாமி

அருப்புக்கோட்டை

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அம்பாசமுத்திரம்

வீரபாகு

தூத்துக்குடி

என். வி. நடராசன்

கி. மனோகரன்

ராமநாதபுரம்

சௌந்தரபாண்டியன்

நெல்லிகுப்பம்

இரெ. இளம்வழுதி

[இடங்களின் தொடர்ச்சியும், ஈடுபடும் தோழர்கள் பெயரும் தொடர்ந்து வெளியிடப்படும்]

★

## புயலில் சிக்கிய பொன்னகரில் 'ஆதிக்கப் புயலை' அகற்றும் வீரர்கள்!

அண்ணல்

புயல் சூழ்ந்த பொன்னகரிலே, ஆரியப் புயல்-ஆதிக்கப் புயல் ஆகியவைகளால் ஏற்பட்ட அநீதிகளை எதிர்த்துப் போராடும் 'சிங்கங்கள்' கூடின.

புயலின் கொடுமை விளைத்த நாசம் போதும்! இனி, வேண்டாம்! —விளைந்த சேதத்தால் உருக்குலைந்தோர் வாழ்வைச் செப்பனிடுவோம் என்று சிந்து பாடும், தி. மு. க. செயல் வீரர்கள், 14—12—52 அன்று, தஞ்சை நகரிலே கூடினர்.

தென்றல் சுமந்து வரும் மணமும், தேனருவி பாய்ந்தோடும் வளமும், செந்நெல் முழக்கும் ஒலியும், சன்னல் எழுப்பும் கீதமும், கனிமரக் காவும், பனிமலர்ச் சோலையும், பாழ்பட்டதைப் பாரீர்!—இது தந்த கேட்டினை யுணர்வீர்!!—என்று சிந்தை நொந்து சீர்படுத்தும் வாழ்வை மேற்கொண்டோர் கூடினர்.

அழகிழந்து காட்சி யளிக்கும் தஞ்சைத் தரணி, வாழ்விழந்த திராவிடத்தின் நிலையை விளக்குகிறதா, இல்லையா? ஒருநாள் புயல—உருமாற்றிவிட்டது, தஞ்சைப் பூமியை. வீழ்ந்த மரங்கள்! அழகிழந்த வீடுகள்! உயிரிழந்த மக்கள்!! — இதை எண்ணும்போது ஆண்டாண்டு காலமாய், ஆதிக்கப் புயலால் அலைக்கழிக்கப்படும் நமது தாயகத்தின் சீர்கேட்டை உணரலாமே! ஒருநாள் புயல்—ஆனால், அது விளைத்த நாசத்தினின்றும் நன்செய் நாட்டை மீட்க எத்தனை நாளாகுமோ? எவ்வளவு தொகை வேண்டுமோ? இயற்கையின் கோரத் தாண்டவம், இது! ஆனால், கெடுமதி என்னும் 'புயல்' சீரழிக்கும் இன்பத் தாயகம் தாங்கும் கேடுகள் எத்தனை எத்தனை!! இதனைப் போக்க, எவ்வளவு நாளாகுமோ? அது விளைக்கும் நாசத்தினின்றும் மீள, எவ்வளவு எவ்வளவு ஆக்க வேலைகள் செய்யப்படவேண்டுமோ? — என்று, எல்லோர் இதயத்திலும், பொறுப்பின் அளவையும், சிறப்பையும் எடுத்துக் காட்டிற்று, தஞ்சைப் பொதுக்குழு.

''ஆன்றோர் மன்றமும், சான்றோர் கூட்டமும், மயிலாட்டமும் குயில் கீதமும் நிரம்பி வழிந்த திராவிடம், சிதைந்து சீரழியச் செய்த ஆதிக்கப் புயலின் அளவு எவ்வளவு பெரிது! அதினின்றும் மீளவேண்டிய பொறுப்பைச் சுமக்கும் நமது கடமை எத்தனைப் பெரிது!!''— என்று எண்ணியவண்ணம் இருந்தனர், தஞ்சையிலே கூடினோர். அந்த எண்ணத்தை எங்கு திரும்பினும் சிதைந்து கிடந்த அருளானந்தசாமி அவர்கள் தோட்டம், சொல்லிக் கொண்டேயிருந்தது. ஒருபோது அழகோச்சிய தோட்டம்! ஒருநாள் புயலால் சின்னாபின்னமாகிக் கிடந்தது!! ஒருபோது, அழகும் ஆண்மையும் வழிந்த இன்பத் தாயகம்! அடித்துக்கொண்டே இருக்கும் ஆதிக்கப் புயலால், சிதைந்து கொண்டே இருக்கிறது!!

*

இதனை விளக்கத்தான் புயலின் கோர நர்த்தனத்தால் விளைந்த கொடுமைகளின் சின்னம் நீங்கு முன், தஞ்சையிலே பொதுக் குழுவை நடத்தவேண்டுமென தஞ்சைக் கழகத்தினர்கள் துடித்தனர்போலும்.

''புயலின் கொடுமை கேட்டு திடுக்கிட்டோம். பொதுக் குழுவைத் தள்ளி வைத்துக் கொள்ளலாமா?'' என்று தலைமைக் கழகத்தார் தெரிவித்தும், ''தயங்கவில்லை நாங்கள். குறிப்பிட்ட தேதியில் கூட்டலாம். தயார்'' என்று பதில் தெரிவித்து, பெய்தமழையின் நீர்த்துளிகள் காயுமுன், வீசிய புயலால் வீழ்ந்த மரங்களை அகற்றுமுன் பொதுக்குழுக் கூட்டம் நடத்திட தஞ்சைக் கழகத்தார், தீவிரமாக இருந்தது, இதற்குத்தான்போலும்.

ஆதிக்கப் புயலால் வாழ்விழந்த திருவிடத்தையும், இயற்கைக் கொடுமையால் சிதைபட்ட பிரதேசத்தையும், ஒப்பிட்டு ஒப்பிட்டு உரையாடிக்கிடந்தனர், தோழர்கள் அத்தனைபேரும் பொதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லவா? பூரிப்பும் புளகாங்கிதமும், ஒருவரையொருவர் சந்திக்கும்போது, தவழ்ந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## புதிய பொலிவு—புதிய வலிவு!! தஞ்சைப் பொதுக் குழு விபரம்

# "புயலால் வாடுவோர்க்குப் போதிய நிவாரணமில்லை"

## நேரில் கண்டனர், தி. மு. க. பிரதிநிதிகள்

### கருணாநிதி, மதியழகன் சுற்றுப்பயணம்

தி. மு. க. புயல் நிவாரண நிதிக் குழுச் செயலாளர் தோழர் மு. கருணாநிதியும், தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ.வும், தோழர்கள் டாக்டர் விசயராகவன் (திருவாரூர் தி. மு. க. செயலாளர்) தென்னன், 'திராவிடப்பண்ணை' முத்துகிருஷ்ணன், சேதுபதி, மயூரான் ஆகியோரோடு 15-12-52 அன்று நேரில் சென்று பல இடங்களைப் பார்வையிட்டனர்.

நாகப்பட்டினம்

நிதிக்குழுத் தோழர்கள் நாகையில் தி. மு. க. செயலாளர் பாப்பையன் அவர்களையும், முனிசிபல் கௌன்சிலர் ராதாமணாளன் அவர்களையும், திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தினரையும் சந்தித்து நிலைமைகளை அறிந்துகொண்டனர்.

நகரசபைத் தலைவருடன்

நகரசபைத் தலைவர் தோழர் திருவம்பலம் செட்டியார் அவர்களைச் சந்தித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வகையில் உதவிகள் செய்யப்படுகின்றன என்பதை விபரமாகக் கேட்டறிந்தனர். பின்னர் கௌன்சில் எதிர்க்கட்சித் தலைவர் தோழர் காயாரோகணம் சேர்வை அவர்களையும் சந்தித்தனர். தி. மு. க நன்கொடை உதவுவது சம்பந்தமாக விளக்கினர்.

நாகைப் போதுநல சங்கம்

பொதுநல சங்கத் தோழர்களுடன் புயல் நிவாரணங்கள் அளிக்கப்படும் முறைகள்பற்றி விவாதித்தனர்.

பால்பண்ணைசேரி

நாகை அடுத்த பால்பண்ணைசேரி கிராமத்துக்குச் சென்று பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டு விபரமறிந்தனர்.

நாகூர்

நாகூரில் புயலால் இடிந்துவிட்ட தி. மு. கழகக் கட்டிடத்தையும் பாதிக்கப்பட்ட இடங்களையும் கண்டுவிட்டு, கழக நண்பர்களுடன் செய்யவேண்டிய ஆக்க வேலைகளைக் குறித்தும் பேசிவிட்டுத் திரும்பினர்.

கீவளூர்

கீவளூரில் தி. மு. கழகத்தோழர்களை சந்தித்து கீவளூரில் நிவாரண நிதி எந்த அளவுக்குத்தரப்படுகிறது என்பதுபற்றிய விபரங்களை சேகரித்தனர்.

திருவாரூரில்

திருவாரூரில் பாழடைந்துபோன சேரிகளைப் பார்வையிட்டு சேரி வாழ்வோர் நிலைகளை அவர்களைக் கேட்டு நேரில் தெரிந்துகொண்டு, உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று தலைமை ஆசிரியர் ராஜாராம் அய்யர் அவர்களைச் சந்தித்துப் பள்ளிக்கூடத்தில் பாதிக்கு மேற்பட்ட வகுப்புக்கள் பாழாகிவிட்டதால் வகுப்புக்கள் 'ஷிப்டு' முறைப்படி நடைபெறுகிற செய்திகளை அறிந்து திரும்பினர்.

#### கருணாநிதி அறிக்கை

தி. மு. க. நிவாரண நிதிக் குழு செயலாளர், சுற்றுப் பயணத்துக்குப்பின், விடுத்துள்ள அறிக்கை:

நானும், நண்பர் மதியழகன் அவர்களும், தி. மு. க. பொதுச் செயலாளர் அனுமதிபெற்று தஞ்சைப் பிரதேசங்களில் முக்கியமான இடங்களுக்கு நேரில் சென்று நிலைமைகளை அறிந்தோம். புயல் நுழைந்த வாயிலெனப்படும நாகையில், நெஞ்சுருகும் நிகழ்ச்சிகள் பலப் பலக கண்டோம்—கேட்டோம். அவசரமாகவும் அவசியமாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தார் உடனடி உதவிகள் புரிவதுபற்றி விசாரித்ததில் அவை திருப்திகரமாக இல்லை என்பதுதான் தெளிவாகிறது.

பணக்காரர், நடுத்தர வர்க்கத்தினர் ஏழைகள் என்ற வரிசையில் பாதிக்கப்பட்டவர்களைப் பார்க்கும்போது, ஏழைகள் பிச்சைக்காரர்களாக மாறுகிற நிலைமையும், நடுத்தர வர்க்கத்தினரில் பெரும்பாலோர் ஏழ்மையில் உழல்கிற நிலைமையும் அந்தப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது.

ஏழை மக்கள் சேரி வாழ்வோர்களுக்கு கூலியாட்களாய் இருப்பவர்களுக்குத்தான் வீடு ஒன்றுக்கு பத்து, இருபது, முப்பது என்ற வகையில் பணம் கொடுத்திருக்கிறார்கள், சர்க்கார். அப்படிப் பார்த்தாலும் ஒரு குப்பத்தில் 100 வீடுகள் தரைமட்டமாக ஆகியிருந்தால் கூலியாட்கள் என்ற தரத்தினருக்கும் கண்துடைப்பு உதவியாக நாற்பது வீடுகளுக்கு அந்தப் பண உதவி அளிககப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, திருவாரூர், கொடிக்கால்பாளையம் சேரியில் இருபது வீடுகள் அழிந்திருக்கின்றன. ஆறு வீடுகளுக்குத்தான், நான்கு வீட்டுக்குத் தலைககு 15 ரூபாயும, இரண்டு வீட்டுக்கு பத்து ரூபாயும் இருபது ரூபாயும் முறையே அளித்திருக்கிறார்கள். மற்ற குடிசையினரிடை குமுறல் அதிகமாயிருக்கிறது.

மருதப்பாடி என்ற சேரியில் பச்சக்காளான் என்ற தோழரின் குடிசை அழிந்து குழந்தை குட்டிகளுடன் தவிக்கிறார். அவருக்கு எந்த உதவியும் செய்யப்படவில்லை. அவா பண்ணையாள் அல்ல. கூலி ஆள்தான்.

(அடுத்த பக்கம் பார்க்க)

---

1-ம் பக்க தொடர்ச்சி

வரவேற்று, 'அண்ணாவா? வா!', 'அக்காவா? வா!' என்று அன்பு சொல்லிட்டு அழைத்து, மனையிலிறுத்தி மகிழ்வோடு உபசரிக்கும், தென்னாட்டுமக்கள், பிறர்துயர் தீர்க்கும் இந்தப் பணிக்கு உதவ, சிறிதும் தயங்கார்! ஆகவே, இத்தகைய சட்டம் பிறப்பித்து, இடுக்கண்ணுக்காளானோருக்கு எல்லோரும் உதவ, வழிசெய்யுமா, இந்த சர்க்கார்? நல்லெண்ணத்தோடு, கூறுகிறேன்! முன்வருவாரா, ஆச்சாரியார்! சாய்ந்து காய்ந்து கிடக்கும் மரங்களை நகர்த்த, நாங்கள் தயார்! "வீழ்ந்த பிணங்களைப புதைக்க ஆளில்லை—வா!" என்றால், வருகிறோம. எவ்வித ஒத்துழைப்பு கேட்டாலும் இருக்கிறோம் நாங்கள்! இதுபோன்ற எதுவும் செய்ய முடியும், எங்களால். உப்புத் தண்ணீரால் உருக்குலைந்த நன்செய் நிலங்கள், வீழ்ந்த வெற்றிலைத் தோட்டங்கள், தென்னஞ்சோலை, இவைகளை மீண்டும் காணச் செய்வதென்பது இலேசான காரியமா? உடலுழைப்பால் உருவாகிடக் கூடியதா இது! அல்ல—அல்ல. இதனால், பாதிக்கப்பட்டோரும் — ஏற்பட்டிருக்கிற நஷ்டமும் சாதாரணமானதல்ல. ஐந்து கோடியாம்—சர்க்கார் தெரிவிக்கிறது.

இவ்வளவு பெரிய தொகையை நாடகம் ஆடியா, நாங்கள் திரட்டியுதவ முடியும்? இதனால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்க "வேஷம்" தடவிவிடுவதால் முடியுமா? எங்கள் விகிதாசாரத்துக்கு 'ஏதோ' தரமுடியும்—அதுபோல கம்யூனிஸ்டுகளால் 'பிடி அரிசி' கேட்டோ, வேறுவழியிலோ, ஏதாவது உதவ முடியும்—ஏனைய அரசியல் கட்சிகளும் அவையவை சக்தியானுசாரம் உதவமுடியும் ஆனால், ஐந்து கோடி ரூபாய் சேதத்தை, எவ்விதம் ஈடுசெய்ய முடியும்? அவ்வளவு பொறுமானமுள்ள தோட்டமும் தரவும் அழிந்ததை, எவ்விதம் மீண்டும் உண்டாக்கமுடியும். ஐந்து கோடி!—இவ்வளவு பெரிய தொகையுதவ, அரசியல் கட்சிகளால் மட்டுமல்ல, நகரசபைகளால் — ஜில்லாபோர்டுகளால் — ஏன்? சென்னை சர்க்காராலேயே முடியாது. சென்னை சர்க்காரால் முடியாது என்பதுமட்டுமல்ல, இவ்வளவு பெரிய தொகையை வதைவோர்க்கு வழங்க, இந்திய சர்க்காருக்கும் மனது வராது. 'டில்லிக்கு மனசுவராது' என்பதை நான்மட்டுமல்ல, 'பத்து கோடி கடன் கேட்டு, 'இல்லை' யென்று டில்லி பதில் தந்தபோதே, சி. ஆர். தெரிவித்திருக்கிறார், 'டில்லிக்கு மனமில்லை' என்று. ஆகவே, கண்களில் நீர்சொரியவைக்கும், இக்கஷ்டம் போக்க, எனது யோசனையை ஏற்றுக் கொள்வாரா, ஆச்சாரியார்? ஆளுக்கு ரூபா ஒன்று வீதம், வசூலித்தாலே போதும்! மீண்டும சோலையும் செழிப்பும் கொஞ்சச் செய்யலாம்!! ஏற்பாரா, இதனை? "மற்ற கட்சிக்காரர்கள் என்மீதும், என் சர்க்கார் மீதும் குறை சோல்வதில்தானே இருக்கிறார்கள்? எங்கே, உருவானயோசனைகள் சொல்கிறார்கள்?" என்று அடிக்கடி, ஆச்சாரியார், வருவோர் போவோரிடம் தெரிவிப்பதாகக் கூறுகிறார்கள். இதோ, உருவானயோசனை! நல்லெண்ணத்தோடு கூடியயோசனை! நம்பிக்கையோடு, கூறுகிறேன். ஏற்கமுன்வரட்டும், முதலமைச்சர்! எனது ஒத்துழைப்பு நிச்சயம் உண்டு என உறுதி கூறுகிறேன். "மந்திரமாவது நீறு! வானவர் மேலது நீறு!" என்று ஜபித்த வண்ணம், செம்பொன் குவியலையும், பாசிப்பிடித்தபணமூட்டைகளையும், தங்கப் பீடங்களையும், ஆடையாபரணங்களையும், முடக்கிவைத்துக் கொண்டிருக்கிறார்கள், தம்பிரான்கள்! அவர்களுக்கேன், இது? செம்பொன்னும் செல்லாக்காசும் ஒன்றுதானே அவர்களுக்கு! அவர்களுக்கேன் இவ்விளவு குவியல்கள். அதனைக் கேட்டு வாங்கி, அவதியைத்துடைக்க உதவலாம்—'ஐந்து கோடி'யைத் திரட்டலாம். ஏன், இதற்கோர் அவசரச் சட்டம் போடக்கூடாது சர்க்கார்? "தேவை போக—மிச்சத்தைத் தருக" என்றோர், சட்டம் ஏன் பிறப்பிக்கக்கூடாது? திருவிழாக்களெனும் பெயரால், தேவாலய விழாக்களெனும் சாக்கிட்டு, செலவழிக்க ஒதுக்கப்படும் தொகை எத்தனையெத்தனை! இவைகளை, இந்தப் புயல் நிவாரணத்துக்கு ஒதுக்கச் செய்தால், என்ன? சீறுவோர் யாரிருக்கிறார்கள்! ஆண்டவன் மனம் 'இத் திருப்பணி' காண குளிருமேயன்றி, கோபிக்கவா செய்யும்? அருமையான பலன்கிடைக்கும்! சுலபமான வேலையுங்கூட!!—செய்வாரா, முதலமைச்சர்? நல்லெண்ணத்தால் அழைக்கிறேன்! அவதிப்படும், தஞ்சை திருச்சிமக்களின் வாழ்வைச் செப்பனிட முன்வருவாரா, ஆச்சாரியார்? "புயலால் சீரழிவோருக்கு நிவாரண உதவிகளை. இஷ்டப்படி செய்யும்படி கலெக்டருக்கு உத்திரவிட்டுள்ளேன்." என்று, தெரிவித்ததாக பத்திரிகைகளில் படித்தேன். இஷ்டப்படி செலவு செய்வதென்றால், என்ன அர்த்தம்? இஷ்டப்படி செலவு செய்ய எங்கேயிருக்கிறது பணம்? சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும் என்றோர் பழமொழி உண்டு. என்ன இருக்கிறது, சட்டியில்! இதனை எவரும் அறியார் எனும் போக்கில், இவ்விதம் பேசிவிட்டால் போதுமா? "கஷ்டமடைந்த எந்த ஏழையும், கலெக்டரைக் கண்டு உதவி கோரலாம்" என்றும் கூறப்பட்டுள்ளது. இது நடக்கக்கூடிய காரியமா! கலெக்டர், ஏழை விவசாயி சந்திக்கூடிய தூரத்திலா இருக்கிறார்? இவ்விதம் கலெக்டர்களைக் கை காட்டிவிடுவது — போதுமா, புயலின் கொடுமைகளைப் போக்க? கண்துடைக்கப் பயன்படலாம்! காரியத்தை நிறைவேற்ற இதுவா, வழி? கலெக்டர்களை நாடக்கூடிய வசதியும் வாய்ப்பும் பெற்றோர் யார்! வடபாதிமங்கலங்களும், குன்னியூரும் தானே நெருங்குவர்—உதவிகோருவர்—பெறுவர். இவ்விதம் பேசிடுவதுதானா, ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் வழி? புயல் சூழ்ந்து பாலைவனம்போல் காட்சியளிக்கும் பகுதியில் மீண்டும் செழிப்பைக் காணச்செய்யும் திட்டம்? மீண்டும் உறுதி கூறுகிறேன், எங்கள் நல்லெண்ணத்தின் காரணமாக, இதனை வலியுறுத்துகிறேன். 'தகுதிக்கேற்ற 'லெவி'—'தம்பிரான்களிடம் வசூல் செய்ய' முன்வரட்டும் ஆச்சாரியார்! உழைக்க — ஒத்துழைக்க நாங்கள் தயார். இந்த வேதனையைத் தீர்க்க, டில்லியார் அக்கரை காட்டார்! 'பசிக்குது' என்றபோது, 'மரம் நடு!' என்று சொன்ன முன்ஷிக்களின் இருப்பிடம் அது. 'அரிசி யில்லையா, கோதுமையைச் சாப்பிடு!' "கோதுமையில்லையா, பருத்திக் கொட்டையைத் தின்னு!" என்று உபதேசித்த, 'உத்தமர்கள்' இருக்கும், இடம் அது. அது, நமது வேதனை அறியாது. ஆகவே, புயல் நிவாரணத்துக்குப் புதுவழிபுகச்சொல்கிறேன். சென்னை சர்க்காரின் நிதிநிலையை நன்குணர்ந்து, மனிதாபிமானத்தால் வெளியிடுகிறேன் இந்த யோசனைகளை. நல்ல காரியத்துக்கு. எவரும் உதவுவர்! முன்வருவாரா, ஆச்சாரியார்?

எதற்கும் சுலபத்தில் அனுதாபம் தெரிவித்துவிடலாம் — ஆதரவு வழங்குவதாக அறிவித்துவிடலாம். ஆனால், அந்த வேதனைகளைத்தீர்க்க, அவைபோதாது — நல்லெண்ணம் வேண்டும். அதனை ஆச்சாரியாரிடம் எதிர்பார்க்கிறேன்—அதனால் இந்த யோசனைகளை வெளியிடுகிறேன். ஏற்பாரா? முன்வருவாரா? அல்லது, இதற்கும், "ஆண்டவன் சித்தம்!" என்ற பதிலைத் தருவாரா! ஆண்டவனின் அருளைப்பெற அன்பைத் தரவேண்டும். அன்பைத்தந்துதான் அருளைப் பெறமுடியும் — என்று அவரே கூறுகிறார். அதனை நினைவூட்டுகிறேன். ஏற்பாரா, என் யோசனைகளை? முன்வருவாரா, நல்லெண்ணத்தின் யோசனைகளை, நடைமுறைக்குக் கொண்டுவர?

★

# படுகொலைகளுக்குக் கண்டனம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

(ஆ) திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளரின் அறிக்கையின்படி டிசம்பர் திங்கள் 5-ம் நாள் வடிகட்டும் முறை எதிர்ப்புக்கிளர்ச்சியை ஆங்காங்கு வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நடத்திய மாணவர்களை இப்பொதுக்குழுக் கூட்டம் பாராட்டிப் போற்றுகிறது.

8. தமிழாசிரியர்மீது நடவடிக்கை

முசிறி நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த திரு. வெ. (கனகசபை) என வழங்கும் பொன்னம்பலனார் அவர்களை நாட்டு வணக்கம் பாடலான 'வாழிய செந்தமிழ்' என்ற பாரதியார் பாடலில் வரும் "ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றும் சீரிய முயற்சிகள் செழிப்ப மிக்கோங்குக" என்ற அடிகளை அரசினர் கருத்துக்கு இசைய பாட வேண்டாம என்று சொன்னதற்காக திரு. சுப்பு சேஷய்யர் பி. எ., எல். டி. என்ற ஆசிரியர், பிற ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் இழித்துக்கூறி அவமதித்ததைக் கண்டிப்பதுடன் அவர் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனநாட்டாண்மைக் கழகத்தாரை இக்கமிட்டிக் கேட்டுக் கொள்வதோடு திரு. பொன்னபபலனார் அவர்கள் மேல் எடுத்துக கொண்டிருக்கும் ஒரு சார்பான நடவடிக்கையை ரத்து செய்து இதைப் பற்றி பாரபட்ச மற்ற விசாரணைக் குழு ஒன்று அமைத்து விசாரிக்கதமிழாசிரியருக்கும், தள்ளி வைககப் பட்டுள்ள மாணவர்களுக்கும் நீதி வழங்க வேண்டுமென இக்கமிட்டி நாட்டாண்மைக கழகத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறது.

1. மஜீத் படுகொலை

(அ) அரசியல் கருத்து வேற்றுமை காரணமாக நெல்லிக் குப்பம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சீரிய தொண்டர் மஜீத் அவர்களைக் காங்கிரஸ் இழிமகன் ஒருவன் குத்திக் கொலை செய்ததை இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், தோழர் மஜீத் அவர்களின் குடும்பத்தார்க்குத் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஆ) தோழர் மஜீத் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பொருள் உதவிபுரிந்த பொது மக்களுக்கும், கிளைக் கழகங்களுக்கும் இப்பொதுக்குழு தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. பாண்டியன் படுகொலை

(அ) திராவிட முன்னேற்றக் கழகத்தில நீங்காப்பற்றுகொண்டு உழைத்துவந்தவரும், சிறந்த பொதுநலத் தொண்டருமான வடசென்னைத் தோழர கே. எஸ். பாண்டியன் அவர்களை அரசியல் கருத்து வேற்றுமை காரணமாக இழி முறையில் தாக்கிப படுகொலைக்கு ஆளாக்கிய காங்கிரஸ் வன்கணாளரின் கீழ்ச்செயலை இப்பொதுக் குழுக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர்க்கும் தன் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) இந்தப் படுகொலையை அரசியல் அநாகரீக அற்பச் செயலாகும் என்று கருதுவதோடு, இப்படிப்பட்ட இழிசெயல் இனி நிகழாவண்ணம் தடுக்கவும், உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து, ஏற்ற தண்டனையைக் கொடுப்பதன்மூலம் நீதியை நிலைநாட்டவும் முயற்சிகளை யெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும என்றும் இக்கூட்டம் அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

3. அனுதாபம்

(அ) கழகத்தினிடத்து அக்கறை கொண்டு விளங்கிவந்தவரும் ஏராளமான பொருள் வசதிகளைப் பொதுப் பணிக்காக அளித்துப் புகழ்பெற்று விளங்கியவருமான விருதுநகர் செந்திலகுமாரனார் அவர்கள் இயற்கை எய்தியது குறித்து வருந்துவதுடன், அன்னார் குடும்பத்தார்க்கும் உற்றார் உறவினர்க்கும் தன் ஆழ்ந்த அனுதாபத்தை இப்பொதுக்குழுக் கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) தேப்பெருமாநல்லூர் தோழர் சண்முகவேல் தாயார் வெள்ளையம்மாள் அவர்கள், தோழர் தில்லை வில்லாளன் அவர்களின் தந்தையார் வீ. ராமகிருட்டினனார் அவர்கள், சிறந்த தொண்டரான குனியமுத்தூர் சுந்திரம் என்கிற குப்புசாமி ஆகியோர் இயற்கை எய்தியது குறித்து இப் பொதுக் குழு வருந்துவதுடன், அன்னார் குடும்பத்தினர்க்குத் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

4. முன்னாள் நிர்வாகிகளுக்குப் பாராட்டும் நன்றியும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கத்திலிருந்து அதன் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்து உதவிபுரிந்த எல்லாப் பொதுக்குழு உறுப்பினர்களையும், கழகச் சொற்பொழிவாளர்களையும், அமைப்பாளர்களையும், பொதுச்செயலாளர்—பிரச்சாரக் குழுச் செயலாளர்—சட்ட திட்ட குழுச் செயலாளர்—நிதிக் குழுச் செயலாளர்—தலைமை நிலைய பொறுபபாளர்கள்—தேர்தல் அதிகாரிகளாகப் பணியாற்றியோர் ஆகியோரையும் இப் பொதுக் குழு மனமுவந்து பாராட்டுவதோடு, அவர்களுக்குத் தன் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

9. நெய்வேலி நிலக்கரி எடுப்பு

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை எடுக்கும் முயற்சியில் சர்க்கார் அதிக அக்கரையுடன் கவனம் செலுத்தி, நிலக்கரியெடுப்பு வேலையைத் துரிதப் படுத்துமாறு இப்பொதுக் குழுக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) திராவிட நாட்டின் அரிய செல்வமாக வாய்த்துள்ள இந்நிலைக்கரிச் சுரங்கத்தில் பணியாற்றிட, பணியாளர்களையும், தொழிலாளர்களையும் வடநாட்டிலிருந்து இருக்குமதி செய்வதைக் கண்டிக்கிறது.

11. தினத்தாள்

நம் கட்சியின் வளர்ச்சிக்கும், நமக்கும் பொதுமக்களுக்கும் நிரந்தரத் தொடர்பு உண்டாக்கவும் மிகவும் அவசியமான கருவியாகிய தினத்தாள் இல்லாததால் இன்னும் ஓரிரண்டுமாதங்களுக்குள் இயககத்தின் சார்பில 'விடுதலை' அளவுக்காவது ஒரு தினத்தாள் தொடங்க வேண்டுமென்று இக்குழு பொதுச் செயலாளரைக் கேட்டுக்கொள்கிறது. அதற்கான உதவியையும் ஒத்துழைப்பையும் குழு தருமென உறுதி கூறுகிறது.

12. தொழிலாளரும் கழகமும்

பொருளாதார சமத்துவமும், ஒரே திராவிட சமுதாய நிலையும் ஏற்படுகிற காலம்வரை, தி.மு.க. தொழிலாளர் விஷயத்திலும் நேரிடையான தொடர்பு கொண்டே பணிபுரிய வேண்டுமென இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பண்ணையாட்களுக்கு, பண்ணை மிராசுதார்களே உதவிசெய்வார்கள் என்று ஆறுதல்கூறிவிட்டு அவர்களைப் புறக்கணித்துவிட்டது சர்க்கார். கூலிக்காரர் குமுறலும் அடக்கப்பட வழி செய்யவில்லை.

விழுந்த வீடுகளுக்கு சர்க்கார் தருகிற பத்து முதல் முப்பது ரூபாய்வரை என்கிற பண உதவி போதவே போதாது. புயலின் கொடுமையால் தென்னைகள்சாய்ந்து மட்டைகள் வீணாகி விட்டதால் கீற்றுக்களின் விலை 100-க்கு 3-0-0 என்பது ஏழு ரூபாய் என்று ஆகிவிட்டது. இதுபோலவே மற்ற சாமான்களின் விலையும் உயர்ந்துள்ளன. வீடுகளைப் புதுப்பித்து வீதி வாழ்விலிருந்து ஏழைகள் விடுபட சர்க்காரின் இந்த உதவி எப்படிப் போதுமானதாகும்? நாகையில் முனிசிபல் கௌன்சில் சப்கமிட்டியொன்று, நிவாரணத்திற்கென இரண்டுநாள் 2000 ஏழைகளுக்கு கஞ்சி ஊற்றினார்களாம். காலரா பரவியிருப்பதால் அந்தக் கஞ்சியும் சாப்பிட மறுத்துவிட்டார்கள் மக்கள். பல பகுதிகளில் முனிசிபாலிடியார் செய்கிற சிறு உதவிகளும், பி. அன் சி. மில் போன்றவைகள் தருகிற போர்வை உதவிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய நிவாரணங்களாக அமையவில்லை. நாகை கீரைக்கொல்லைத் தெருவில் வீரப்ப ஆசாரி என்பவரும் அவருடைய மூன்று பிள்ளைகளும் அன்றாடம் ஆச்சாரித் தொழில் செய்து ஜீவிப்பவர்கள். அவர்கள் வீடு இருந்த இடம் தெரியாமல் ஆகிவிட்டது. அந்தத் தெருவில் இரண்டொரு வீடுகளைமட்டும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் குறித்துக்கொண்டு வீரப்ப ஆசாரி வீட்டை விட்டுவிட்டார். அந்த வட்டார கௌன்சிலர் ராதாமணாளன் (தி.மு.க.) ரெவின்யு இன்ஸ்பெக்டரை அங்கு நேரில் அழைத்துச் சென்று நிலைமையை விளக்கியும் பயனின்றிப்போய்விட்டதாம். இப்படிப்பட்ட சர்க்காரின் உதவி எப்படிப்பரிபூரண உதவியாக முடியும்?

நாகை, கீழ் மேல் தெருவில் ஒரு ஜட்கா வண்டிக்காரர் — புயலால் வண்டி நொருங்கிவிட்டது ஸ்டாண்டில் குதிரையைக் கொண்டுவந்து வீட்டு வாசலில் கட்டியிருந்தார். குதிரைமீது தென்னைமரம் விழுந்து குதிரை செத்துவிட்டது. வீடும் அழிந்தது. வைத்தியலிங்கம் என்ற அந்த வண்டிக்காரரும் அவர் மனைவியும் தெருவில் பிச்சை எடுக்கிறார்

பால்பண்ணைசேரி என்ற கிராமத்தில் கடற்கரைக்கு அருகாமையில் பூந்தோட்டம் என்ற மலர்க்கொல்லைகள் ஏராளமாக இருந்தன. பரம்பரை சொத்துக்கள் அவைகள். அவைகளில் ஏழைகள் மல்லிகை பயிரிட்டு அதை விற்று அன்றாடம் வயிறு கழுவி வந்தனர். அந்த மல்லிகைத் தோட்டமெல்லாம் கடல் நீரால் மண்மேடாகி விட்டது. அந்தப்பூவை வாங்கி தெருவில் விற்றுப் பிழைத்தவர்கள் சுமார் மூன்னூறு குடிசை வீட்டுக்காரர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுத் துடித்துப் போயிருக்கிறார்கள். அதையும் சர்க்கார் அக்கரையோடு கவனிப்பதாகத் தெரியவில்லை. குடிசைகள் புதுப்பிக்கப்பட அந்த ஏழைகளுக்கு இருபதோ—முப்பதோ ரூபாய்கள் நிதி அளித்துப் பயனில்லை. கள். இவர்களை சர்க்கார் கவனித்ததாகத் தெரியவில்லை. இப்படிப்பலப் பல கொடுமைகள்.

நாகை ரோலிங் மில்காரர் தங்களிடம் வேலை பார்க்கும் சுமார் மூன்னூறு தொழிலாளருக்கு நிவாரணத்திற்காக சம்பளத்தில் முன்பணமாக ஐம்பது ரூபாய் தந்திருக்கிறார்களாம். அதுவே அவர்களுக்குப் போதாதாம் எனகிறபோது சர்க்கார் தரும் இந்த சாதாரண உதவிகள் மில்தொழிலாளரைவிட வறுமை வாழ்விலே கிடந்தவர்களுக்கு எப்படி திருப்தியளிக்க முடியும்?

இந்த நிலைமைகள்தான் தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் முழுதும் பரவிக் கிடக்கின்றன. சர்க்காரின் உதவி மிகவும் தாராளமாக இருக்க வேண்டும். மாகாண சர்க்காரால் இயலவில்லை இவ்வளவு பெரிய தொகை செலவு செய்ய என்றால், உடனடியாக மத்ய சர்க்கார் தலையிட்டு பரிபூரணமான நிவாரண உதவிகளை கவனிக்க வேண்டும்.

நிவாரண வேலைகளில் ஆங்காங்குள்ள தி. மு. கழகத்தினர் இயன்ற அளவு ஈடுபட்டிருக்கின்றனர். தி. மு. கழகத்தின் பொதுக் குழுவின் முடிவுபபடி, கழகத்தின் நிலைமைக்கு மீறிய வகையில் 25000 ரூபாய் நிவாரண நிதி தருவதாக உத்தேசித்து அமைக்கப் பட்ட நிதிக் குழுவின் நாடகம் போன்ற முயற்சிகள மூலம் நிதி வசூலிக்கும் காரியத்தில் ஈடுபட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மற்ற மாவட்டங்கள் உடனடியாக உதவி புரியும் வகையில் தி. மு. கழகத்தின் முயற்சிக்கு ஆக்கம் தர வேண்டுகிறேன். அன்புள்ள

மு. கருணாநிதி.

---


**வெளி வந்துவிட்டது!**

**நோய், வறுமை, வயோதிகம், மரணம் ஏன்?**

**தனக்குள் கேட்டான், தார்வேந்தனைக் கேட்டான், தரணியைக் கேட்டான்—பயனில்லை.**

**ஆரண்யமெல்லாம் சுற்றினான்—இறுதியில் அறிவில் அறிந்து, அறிந்ததை அகிலத்துக்கோதிய**

**சாக்கிய சிம்மன்**

[சி. பி. சிற்றரசு]

விலை ரூ. 1—0—0

**திராவிடப் பண்ணை**

தெப்பக்குளம், : : திருச்சி.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோட்டத்தில். தி. மு. க. சட்டதிட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட வாரியாக வந்து கலந்துகொண்ட தோழர்கள்:

சென்னை: சத்தியவாணிமுத்து, ஆர். பாண்டியன், அ. பொ. அரசு, கே. கோவிந்தசாமி, எ. கே. சாமி, அருண்மொழி, காஞ்சி மணிமொழியார், ஜே. வி. ராஜன், பி. அண்ணாமலை, என். வி. நடராஜன், இரா. நெடுஞ்செழியன், கே. எம். கண்ணபிரான்.

செங்கற்பட்டு: அண்ணாதுரை, அரங்கண்ணல், செ. கோ. பெருமாள், கே. டி. எஸ். மணி, தில்லை. வில்லாளன், டி. சபாபதி, சி. வி. எம். அண்ணாமலை, ஒய். என். இராமலிங்கம்.

வடஆற்காடு: டி. ஜி. தங்கவேலு, கே. பி. சுந்தரம், வி. டி. அண்ணாமலை, ஆர். சம்பங்கி, க. நெடுஞ்சோழன், எ. எல். சி. கிருஷ்ணசாமி, என். எம். சலாவுதீன், பி. ராமலிங்கம்.

தென்ஆற்காடு: டி. என். ஜி. அண்ணாமலை, என். இமயவரம்பன், ஆர். பாலகுருசாமி, கே. எ. பழனியப்பன், இரெ. இளம்வழுதி, ச. இராசகோபாலன். சி. முனுசாமி.

தஞ்சை: வ. சுப்பிரமணியன், என். எஸ். இளங்கோ, தி. கோ. சினுவாசன், எ. கே. வேலன், ப. நாராயணசாமி, எஸ். பெத்தண்ணன், கே. கே. நீலமேகம், மு. கருணாநிதி, எஸ். கே. சாமி, ஆர். பழனிச்சாமி.

திருச்சி: கே. ஆர். ராசா, ஜி. பராங்குசம், கே. எ. முருகேசன், எம். எஸ். மணி, மீ. சு. இளமுருகு பொற்செல்வி, து. ப. அழகமுத்து, எம். ஆர். செல்லப்பா, அ. பொ. தர்மலிங்கம்.

இராமநாதபுரம்: இராம. வெள்ளையன், எம். எஸ். இராமசாமி, எ. சுப்பையா, சிவ. சண்முகசுந்தரம், எஸ். உத்தண்டன், இராம. சப்பையா, எ. வி. பி. ஆசைத்தம்பி, சவுந்தர பாண்டியன்.

நெல்லை: சு. கந்தசாமி, ச. வீரபாகு, ஆர். பாண்டியன், ஆர். எஸ். தங்கப்பழம், டபுள்யூ. டி. துரைசாமி, எஸ். நடராஜன், எம். ரத்தினம்.

சேலம்: ஜி. பி. சோமசுந்தரம், பி. ராமலிங்கம், பி. எம். குப்புசாமி, ஆர். வரதராஜன், ப. கண்ணன், ஈ. ஆர். கிருஷ்ணன், இரா. சகந்நாதன், இரா, தாண்டவன், கே. எ. நடராசன்.

மதுரை: க. வே. விக்கிரமாதித்தராசன், கே. எஸ். ராஜமான், வெ. தியாகராசன், ச. வெ. தொந்தி, கு. ப. ம. தர்மன், எம். எஸ். பழனியப்பன், பால்ராசன்.

நாஞ்சில் மாவட்டச் சார்பில் தோழர் வி. எம். ஜான்.

பிரதியேகப் அழைப்பின் பேரில் கலந்துகொண்டோர்:- எம். பி. வடிவேல், தி. வீ. முத்துக்கிருஷ்ணன், பொளூர் கே. சுப்ரமணியன், சி. பி. சிற்றரசு, ஆ. இராமாமிர்தத்தம்மையார், கண்ணதாசன். என். சாம்பு, ப. உ. சண்முகம், நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி.

வரமுடியாமைக்கு வருந்தி, தபால், தந்திமூலம், சம்மதம் தெரிவித்தவர்கள்:- எம். எஸ். சிவசாமி, வே. அ. இளஞ்செழியன், எஸ். கலிங்கன், கே. தங்கவேலு, கே. பி. நெடுமாறன், கே. அன்பழகன் (பிரத்தியேக அழைப்பு)

கூட்டம் துவங்கியதும், புதிய மாவட்டச் செயலாளர்களையும் பொதுக் குழு உறுப்பினர்களையும் வரவேற்று, அவர்களுக்குத் தமது பாராட்டுதலைப் பொதுச்செயலாளர் சி. என். ஏ. தெரிவித்துக் கொண்டார். பிறகு, இதுகாறும் தன்னுடன் கழகக் காரியங்களை செவ்வனே நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் பொதுச் செயலாளர் என்ற முறையில் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் போது, "ஜனநாயகமுறை வெற்றி பெற வேண்டும் என்பதில் ஆசை கொண்டவன், நான். அந்த ஆசையின் பிரதிபலிப்பாக இங்கே நீங்களெல்லாம் வந்திருக்கிறீர்கள். உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். நாம் எல்லாம் சேர்ந்ததுதான், திராவிட முன்னேற்றக் கழகம். இதனை அனைவரும் மனதில் பதிய வைத்துப் பாடுபடவேண்டும்" என்றும் தெரிவித்துக் கொண்டார்.

பிறகு, கூட்டத்துக்குத் தோழர் கே. கே. நீலமேகம் (தஞ்சை மாவட்டச் செயலாளர்) தலைமை தாங்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர் தலைமை வகித்ததும், பொதுச் செயலாளர் தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்தார்.

தோழர் அண்ணாதுரையின் பெயரை எல்லா மாவட்டத்தினரும் ஒருவர்பின்னொருவராகப்பிரரேபித்தனர். வேறு எவருடைய பெயரும் பிரரேபிக்கப்படாமையால், 'அவரே மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதை அளவிலா ஆனந்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்" என்று பலத்த கைதட்டுதலுக்கிடையே தலைவர், அறிவித்தார்.

தன்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, "இந்தப் பொறுப்பை ஏற்று நடத்த யாராவது முன்வந்தால், கழக சம்பந்தமான பிரச்சாரம் முதலிய காரியங்களில் முழுநேர பங்கு எடுத்துப் பணியாற்றலாமெனக் கருதியிருந்தேன். ஆனால், அன்போடு மீண்டும், என்மீது பொறுப்பு சுமத்தியிருக்கிறீர்கள். உங்கள் அன்பை நினைத்து, ஏற்றுக்கொள்கிறேன். நாமெல்லாம் வருங்காலத்தில் மிகத்தீவிரமான காரியங்களில் ஈடுபடவேண்டியிருக்கும். அதற்கான வகையில் நமது கழகத்தைப் பலப்படுத்த வேண்டும்" என்று பொதுச் செயலாளர் அண்ணாதுரை கூறினார்.

பிறகு, நாட்டின் நிலைமைகள் குறித்தும், கழகம்நடந்துவந்துள்ள முறைகளைப்பற்றியும் விளக்கப்பட்டது. பலதீர்மானங்களின்மீது விவாதம் ஆரம்பமாயிற்று.

இடைவேளையில், அறுசுவையுண்டி அளித்தனர் தஞ்சைக் கழகத்தார்! அன்புடன் கலந்து அவர்களளித்த விருந்துக்குப் பின்னர் மூன்று மணிக்கு மீண்டும் பொதுக் குழு கூடி, ஐந்து மணி வரையில் விவாதம் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிறகு, தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவர நாம் செய்யவேண்டிய காரியங்களைப் பொதுச்செயலாளர் விளக்கினர். பொதுக்குழுவை இவ்வளவு வெற்றிகரமாக நடத்தித் தந்த தஞ்சை நகரக் கழகத்தோழர்களுக்குத் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் பொதுக்குழுத் தோழர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார். பொதுக்குழு கூட்டம் முடிந்ததும், எல்லாத் தோழர்களையும் வைத்து புகைப்படம் எடுக்கப்பட்டது. பிறகு, தேனீர்விருந்துஅளிக்கப்பட்டதும் — யாவரும் பொதுக் கூட்டத்துக்கு புறப்பட்டனர்.

* * *

தி. மு.க. வரலாற்றிலே, பொதுக் குழு கூட்டங்கள் நடைபெறும் இடங்கள், முக்கியத்துவம் பெறும். கழகக் காரியங்களுக்குப் பாதை வகுக்கும் பொதுக்குழுக் கூட்டத்திலே, தஞ்சையில் கூடிய இப்பொதுக்குழு, சிறப்பு வாய்ந்ததாகும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர், கூடினர்! கூடியதோடு மட்டுமின்றி, பற்பல நல்லமுடிவுகளைச் செய்திருக்கிறார்கள். கழகத்துக்கென இந்த மூன்றாண்டுகளில் ஆங்காங்கே நாடகமூலம்நாம்திரட்டி உருவாக்கிய கழகச் சொத்துகளுக்கான 'டிரஸ்ட்' ஒன்றும், இந்தப் பொதுக்குழுவில்தான், நிறுவப்பட்டது. கழகத்துக்கென இனிமேற்பட, எவ்வித சொத்துக்கள் வாங்கினாலும், அவைகளைப் பரிபாலனம் செய்யும் பொறுப்பு, இந்த 'டிரஸ்டு'க்குத்தான் உண்டு. பொதுவாழ்க்கையில், பலர் கூடித்திரட்டும் நிதி—சொத்து விவகாரங்களில், தனிப்பட்டோர் எவருடைய ஆதிக்கமும் இருப்பது கூடாது என்பதை அடிக்கடி பொதுச்செயலாளர் வலியுறுத்தி வந்திருக்கிறார். அதிலும் 'வேஷம்' போட்டு, நாடகமாடி நாம் சேர்த்ததுதான், இந்தச் சொத்து. சொத்தென்றால், 'பாங்கி'யில் இவ்வளவுகிடக்கிறது—என்ற பட்டியல் அல்ல. அப்போதைக்கப்போது கழகக் கட்டிடமாகவும், தினசரி நடத்துவதென்றும், கிடைத்த பணத்தை, ஒரு காரியத்துக்குப் பயன்படுத்த வேண்டுமென்பதும் பொதுச் செயலாளரின் ஆசையாகும். ஆசை, இன்று நேற்றல்ல — எப்போதும் அவரால் வலியுறுத்தப்பட்டு வருவதை, நாம் அறிவோம். இவ்விதம் 'நாடகமாடி' நாம் சேர்த்த பணத் தொகையைக் கண்டு, பொறாமையும் கேலியும் எழுப்பும் ஒருசிலர், இல்லாமலில்லை. நமது வளர்ச்சி 'கண்களை' உறுத்துவதால், 'நாடகத்துறை'யையே அவர்கள் கண்டிக்குமளவுக்குப் போயிருக்கும், விசித்திரத்தை அறிவோம், நாம். ஆகவே, கழகசொத்துகளுக்கென, 'டிரஸ்ட்' ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது—ஆமாம், நிறுவப்பட்டதல்ல! தேர்ந்தெடுக்கப்பட்டது!!—இந்தப் பொதுக் குழுவில்தான். அதோடு, புயலின் கொடுமைக்கு ஆளானோருக்கு உதவி செய்யவும், கைத்தறியாளருக்கான ஆதரவைத்திரட்டவுமான, இரு முடிவுகளும் செய்யப்பட்டிருக்கின்றன (தீர்மானங்களை, கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்). இத்தகைய செயல்முறைகளை வகுத்ததன் மூலம், தி. மு. க. தன்னுடைய இலட்சியப் பாதையை மாற்றாருக்குத் தெளியப்படுத்தியுள்ளது. கள்ளங் கபடமற்றபாதை! ஆனால் கள்ளியும் முள்ளும் நிரம்பியது!! அந்தப் பாதையில், நடந்து சென்று, ஆதிக்கப்புயலால் வதைபட்டுக்கிடக்கும் தாயகத்தை மீட்க வேண்டும்—அதற்கான புதிய பொலிவையும், வலிவையும் தஞ்சைப் பொதுக் குழு தருகிறது. வாழ்த்துகிறோம், பொதுக் குழுவினரை—"வளர்வோம், நாம்!" என்று முரசத்தைக்கொட்டுவோம்!!

—

# ஆமதாபாத் ஆண்டு விழா

"இந்தாருங்கள் ரூ. 150"

"யார் நீங்கள்?"

"தோழர்கள் தந்தார்கள்—பெற்றுக்கொள்ளுங்கள்"

*

தி. மு. க. மாநில மாநாட்டு துவக்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம், 'திராவிட நாடு' அலுவலகத்துக்கு வந்த ஒரு தோழருக்கும் எனக்கும், மேற்கண்ட உரையாடல் நடைபெற்றது.

"யார் நீங்கள்?" என்ற என் கேள்விக்குக் கிடைத்த பதில் என்னைத் தூக்கி வாரிப்போட்டது.

"ஆமதாபாத்தில், தி. மு. க. கிளையா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டேன். "ஆமாம்! அவர்களனுப்பிய காணிக்கைதான் இது" என்றார், வந்த தோழர். வியந்தேன் — அன்றுமுதல், அந்தத் தோழரும், அவர் கூறிய கிளைக் கழகமும் என் மனதைவிட்டு அகலவில்லை. ஆகவே, பம்பாயிலிருந்து ரயிலேறிய எனக்கு, ஆர்வமும் ஆசையும் அதிகமிருந்தது. சூரத்—பரோடா முதலிய முக்கிய இடங்களைத் தாண்டி, பம்பாயிலிருந்து 304 மைல் தொலைவிலுள்ள ஆமதாபாத் நகரை, மு. கருணாநிதி, என். வி. நடராசன், கண்ணதாசன் ஆகியோரும், நானும் (அரங்கண்ணல்) விடியற்காலை(4-30மணிக்கு ரயிலில்) சேர்ந்தோம. கொட்டும் பனி! நடுக்கும் குளிர்!! ஆகியவைகளையும் பொருட்படுத்தாது அணிவகுத்து நின்ற ஐம்பதுக்கு மேற்பட்ட தோழர்கள் எல்லோருக்கும் மலர் மாலைசூட்டி, அழைத்துச்சென்றனர்.

காலை 10-மணிக்கு காந்திஸ்டோர் மண்டபமெனும் அழகியதோர் மண்டபத்தில், கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் மு. கருணாநிதி தலைமையில நடைபெற்றது. அழகான ஏற்பாடு! சுமார் இருநூறுக்கு மேற்பட்ட கழகத்தவர் கூடிக்கிடந்தனர்! கழக உறுப்பினர் 'ரசீது' வைத்திருந்தோர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். துவக்கத்தில், தாயகத் தொண்டர்களை வரவேற்று கழகச் செயலாளர் ஆர். வைத்தியலிங்கம் பேசியபின், கண்ணதாசன், நான், என். வி. நடராசன் ஆகியோர், கழக வளர்ச்சி முறைகள் குறித்து விளக்கும் வாய்ப்பு பெற்றோம்.

மாலை 5-மணிக்கு முனிசிபல் திடலில் அமைக்கப் பட்டிருந்த மேடையில், ஆண்டுவிழா துவங்கியது. செயலாளர் ஆர். வைத்தியலிங்கம் தலைமை தாங்கினர். ராஜமாணிக்கம் குழுவினர், போர்முனை நோக்கிடும் வீரர்கள்போல், 'வாழ்க வாழ்கவே! வளமார் எமது திராவிட நாடு!!' எனும் கீதத்தை இசைக்க, என். வி. நடராசன், கழகக் கொடியினை ஏற்றுவித்தார்.

கண்ணதாசனும், நானும் பேசினோம். என். வி. நடராசன் சொற்பொழிவாற்றிய பிறகு மு. கருணாநிதி, நீண்டநேரம் பேசினார். ஏராளமான மக்கள், ஆண் பெண் உள்பட ஆவலோடு திரண்டிருந்தனர்! அங்கும் பம்பாயைப்போல, ஆர்வமிக்க தொண்டர்படை இருக்கிறது! அதன் தளபதி ஆர். கிருஷ்ணமூர்த்தி.

கூட்டம் முடிந்ததும், உடனே ரயில் ஏறவேண்டியவர்களானோம். இந்தி மொழியும், குஜராத்தியும் பேசப்படும் அங்கே, "திராவிடநாடு திராவிடருக்கே!" "பொதுச் செயலாளர் வாழ்க!" எனும் தேன்தமிழ் முழக்கமிட்டு, காதுகளைக் குளிர வைத்து, வழியனுப்பினர் — தாங்காத சோகத்துடன். ரயில் கிளம்பிற்று! திரும்பிப் பார்த்தேன் — தோழர்களின் கூட்டம் போய்க்கொண்டிருந்தது. ஆலைகளிலிருந்து கிளம்பும் புகைமண்டலம், ஆகாயத்தை நோக்கிப் பரவிக்கொண்டிருந்தது. பிரிந்தேன்! பெருமூச்சு விட்டேன்!!

---

## வாழ்க்கை ஒப்பந்தம்

15—11—52 சனிக்கிழமைகாலை 9-30 மணிக்கு சாணாங்குப்பத்தில் எனது இல்லத்தில் திரு. க. அன்பழகன் தலைமையில் எங்கள் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

அம்சவேணி
T. P. கோவிந்தன்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.